விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 045 வள்ளுவர் ஆண்டு 2056 தை 20 ஞாயிற்றுக்கிழமை (02.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## எதிர்த்து அரசியலில் ஈடுபட்டாலும் சமாதானக் கரங்களைப் பற்றியவர்

### மாவைக்கான இரங்கல் செய்தியில் மகிந்த



(கொழும்பு)
எதிர் அரசியலில் ஈடுபட்டிருந் தாலும் சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட் டியபோது மாவை சேனாதி ராஜா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி வெளியிட் டுள்ள இரங்கல் செய்தியில் அவர் 19

## மாவைக்கு நாமல் நேரில் அஞ்சலி



19

## மாவையின் இறுதிக்கிரியை இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியை இன்று நடை பெறும்.

அதன்படி இன்று காலை 8 மணிக்கு மாவிட்ட புரத்தில் உள்ள 19

# மகிந்தவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### பிரதியமைச்சர் சுனில் வட்டகல



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அநுர தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுக்களை கண்காணிக்க குழு நியமனம்

(கொழும்பு)
தேசிய மக்கள் சக்தி அர சாங்கத்தின் சகல அமைச் சுக்களுக்கும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமிக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் 19

## யாழிலிருந்து பயணமான ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் வாகனம் விபத்து
### நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின் கொழும்பு திரும்பிய ஜனாதிபதி செயல கத்திற்குச் சொந்த 19

## கடந்த அரசு காலத்தில் நடைபெற்ற வழக்குகள் தூசு தட்டப்படுகின்றன
### முன்னாள் அமைச்சர்கள் பலர் கைதாகலாம்!

(கொழும்பு)
கடந்த அரசாங்கங்களின் காலத்தில் நடைபெற்ற மோசடி, சட்டவிரோத சொத்துக்குவிப்பு விடயங்களுடன் தொடர்பு டைய பதினொரு வழக்குகள் தற்போதைக்குத் தூசு தட்டப் பட்டுள்ளதாக அறியக் கிடைத் துள்ளது.

இதன்படி முன்பு நடை பெற்ற ஊழல், மோசடி மற்றும் சட்டவிரோத 19

## 76 வேலைத்திட்டங்களை இலங்கையில் சீனா ஆரம்பிக்கிறது

(கொழும்பு)
இலங்கையில் சீனா 76 அபிவிருத்தி வேலைத்திட்டங் களை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்தார்.

சீன அரசாங்கம் கைவிட் டிருந்த வேலைத்திட்டங்கள் உட்பட புதிய வேலைத்திட் டங்களையும் ஆரம்பிக்கவுள்ள தாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது அரசாங்கம்நாட்டைப் பொறுப்பேற்கும்போது நாடு வங்குரோத்து நிலையிலிருந் தது எனக் குறிப்பிட்ட ஜனாதி பதி,

நாடு வங்குரோத்து நிலையிலிருந்ததால் 19

## 5 வருடங்களில் விபத்தால் 12, 182 பேர் பலி

(கொழும்பு)
நாடளாவிய ரீதியாக கடந்த 5 வருடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 12,182 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் போக்குவரத்துப் பிரி வின் சிரேஷ்ட பொலிஸ் 19

## திருக்குறள் வளாக திறப்பு விழா இன்று



### இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் மகாதேவன் வருகை

(யாழ்ப்பாணம்)
சிவபூமி அறக்கட்டளையால் மாவிட் டபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட திருக்குறள் வளாகத் திறப்பு விழா இன்று காலை 8.30 மணியளவில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1990 பூராடம் நட்சத்திரம் 7இல் செவ்வாய் Bsc (Hons), SLAS தர பதவி வகிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

(3305)

தொடர்பு: 077 925 4086



## Australia visas

மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியாவிற்கு செல்ல அரிய வாய்ப்பு

**Visit Visa  Student Visa**

- மிகக் குறுகிய காலத்தில் செல்ல முடியும்.
- குடும்பமாகவும் செல்லலாம்.
- சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்.
- ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மீள விண்ணப்பித்து தரப்படும்.
- 99% உத்தரவாதம்.



மேலதிக விபரங்களுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்

13 வருடகாலமாக தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரே ஒரு நிறுவனம்

(3306)

**Winstar Consultants Pvt Ltd**

45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 077 077 6979



## கர்நாடக இசைக்கச்சேரி



அமரர் வித்துவான் ஸ்ரீ வே.கங்காதரன் நினைவாக

பாட்டு : ஸ்ரீ அபிலாஷ் கிரிபிரசாத்
வயலின் : ஸ்ரீமதி நெய்வேலி லலிதா ராஜுலு
மிருதங்கம் : ஸ்ரீ ராம்கிரன் சிவசுப்ரமணியம்
கடம் : ஸ்ரீ அபிராம் சிலுகுரி
கஞ்சிரா : ஸ்ரீ அ.சண்முகப்பிரியன்

காலம்
02.02.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00

இடம்
துர்க்காதேவி மணி மண்டபம், கோவில் வீதி, நல்லூர்.

அனுமதி இலவசம்

(3292)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் தொடர்பாடல் ஊடகக் கற்கை பாட ஆசிரியை
திருமதி **பானுரேகா அன்ரனி சுதாகர்**
அவர்களது அன்புக் கணவர்

### வண. ஜெ.அன்ரனி சுதாகர்

**CACM Church Navaly**

அவர்கள் 28.01.2025 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

(C-2179)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பொன்னம்மா(ராசம்)



குடத்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்மா(ராசம்) அவர்கள் 31.01.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கதிராத்தைப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நில அளவை கண்காணி) அவர்களின் அன்பு மனைவியும் கந்தையா கந்தசாமி (ஆழ்வாப்பிள்ளை), கந்தையா சிவஞானம்(குணம்), கந்தையா சிறீஸ்கந்தராசா(சிறி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகணேசன்(கண்ணன் - லண்டன்) சிவதாசன்(கஜமுகன் ஸ்ரோர்ஸ்), சாந்தகுமாரி(சசி - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாயினி(லண்டன்), கீர்த்தனா(ஆசிரியர் - யா/நெல்லியடி மத்திய கல்லூரி), கஜந்தகுமார்(சங்கர் - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜி, கனி(லண்டன்), நந்தனா, ஹாசினி(இலங்கை), நேகா, தனியா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோதிமுத்து, நவமணி, இந்துமதி(ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 03.02.2025 திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை மேற்கு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

T.P : 077 918 0202

(C-2174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரிப்பு

## சமூக வைத்திய நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)



**இலங்கையில் எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் உயர்வடைந்துள்ளதுடன், வருடாந்தம் பிறந்து ஒரு வயதை அடைவதற்கு முன்னரே சுமார் 2,500 குழந்தைகள் உயிரிழப்பதாக சமூக வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சமூக வைத்திய நிபுணர் கபில ஜயரத்தன தெரிவித்தார்.**

இலங்கை மருத்துவ சங்கத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இவ்விடயம் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது வைத்தியர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் 3 இலட்சத்து 13 ஆயிரம் தாய்மார்கள் கர்ப்பம் தரிப்பதுடன், 2 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும் அவ்வாறு பிறக்கும் அனைத்துக் குழந்தைகளும் நல்ல தேகாரோக்கியத்துடன் பிறப்பது இல்லை.

ஆண்டு தோறும் 5 வயதுக்கும் குறைந்த 3,300 குழந்தைகள் உயிரிழக்கின்றனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

நாட்டில் கர்ப்பம் தரிக்கும் தாய்மார்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு கர்ப்ப காலத்தின் ஆரம்ப பகுதியில் கரு கலைவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சுமை, கருத்தரித்தல் தொடர்பில் போதியளவான தெளிவின்மை, வாழ்க்கை சூழல் போன்றன இதற்கு காரணமாக உள்ளன.

மேலும் இந்நாட்டின் சுகாதார சேவையின் தரம் வீழ்ச்சி கண்டிருப்பதும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது.

நோய் நிலைமைக்கு ஆளாகியதன் பின்னர் சிகிச்சைகளை பெறுவதை விட நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வது அவசியம். இலங்கையர் என்ற ரீதியில் நாம் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

நாட்டில் உள்ள 30 சதவீதமான சிறுவர்கள் அதிக உடல் பருமனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன், குறிப்பிட்ட ஒரு பகுதியினர் போஷாக்கு இன்மையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஊனக் குறைபாட்டுடன் கூடிய கருக்கலைப்புக்கு இந்தியா போன்ற நாடுகள் அனுமதி வழங்கியுள்ளன.

எனினும் இலங்கையில் அச்சட்டத்தை கொண்டு வருவதற்காக சுமார் 20 வருடங்களாக போராடி வருகின்ற போதிலும் இதுவரை சாத்தியப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)

# திருகோணமலை வீதியில் கோர விபத்து இருவர் பலி; சுமார் 35 பேர் காயம்

(திருமலை)

திருகோணமலை - ஹபரண வீதியில் இடம்பெற்ற கோர விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 35 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பேருந்து ஒன்றும் வானும் மோதியதில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது, வானின் சாரதி மற்றும் பேருந்தில் பயணித்த பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.





இந்த நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் குழுவொன்று தற்போது தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# இரண்டு வாரங்களுக்குள் குறைவடையவுள்ள தேங்காய் விலை

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்குள் தேங்காய் விலை நிச்சயமாகக் குறையும் என தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் சாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றின் அரசியல் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இன்னும் 2 வாரங்களில் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அதன்படி தற்போது ரூ.250 அளவில் உள்ள ஒரு தேங்காய் விலை, எதிர்காலத்தில் ரூ.180 முதல் 200 வரை குறைய வாய்ப்புள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் இறக்குமதி செய்யப்படவுள்ள இந்த 200 மில்லியன் தேங்காய்களை தேங்காய்ப் பால், தேங்காய்ப் பவுடர் மற்றும் குளிரூட்டப்பட்ட தேங்காய் என்று மூன்று வகைகளின் அடிப்படையில் இறக்குமதி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பேருந்துக் கட்டணத்தில் மாற்றமில்லை

## பேருந்து உரிமையாளர் சங்கம்

டீசல் விலை அதிகரிக்கப்பட்டாலும் பேருந்து பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைய, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், எரிபொருட்களின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 18 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, 331 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

எவ்வாறாயினும் ஏனைய எரிபொருட்களின் விலையில் மாற்றம் மேற்கொள்ளாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 வாகன சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் உள்ள பொலிஸாரால் குறித்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய குற்றத்தின் கீழ் 3,876 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய குற்றத்தில் 190 சாரதிகள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 167 இலங்கையர்களுக்கு பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை போதைப் பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் கும்பல் தலைவர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் பொலிஸார் பிறப்பித்த சிவப்பு பிடியாணையின் கீழ் அவர்களை நாட்டிற்கு திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் உதவியுடன் அவர்களை கைது செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள 167 இலங்கை குற்றவாளிகளுக்கு சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த குற்றவாளிகள் தற்போது டுபாய், இந்தியா, இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் வசித்து வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# குருந்தூர் அணியின் சீருடை அறிமுகம்



புதுக்குடியிருப்பில் சிறப்பான முறையில் குருந்தூர் அணியின் கிரிக்கெட் வீரர்களுக்கான சீருடை அறிமுக விழா கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்றிருந் தது.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் செயலாளர் வி.பிரதீபன், முல்லைத் தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் போட்டி ஒருங்கிணைப்புத் தலைவர் இ. சுமன், குருந்தூர் அணியின் உரிமையாளர் இ.கவாஸ்கர், முகா மையாளர் பா.சதீசன் உட்பட அணி வீரர்கள் கலந்து கொண்டிருந்த னர். (நி-8-299)

# கோலாகலமாக ஆரம்பமாகியது முல்லை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி



முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காணவும், அவர்களின் திறமையை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் முல்லை பிரீமியர் லீக் (Mullai premier league) கடின பந்து கிரிக் கெட் போட்டியானது நேற்றுக் காலை மாமூலை சுதன் சுதனா விளையாட்டு மைதானத்தில் பிரமாண் டமாக ஆரம்பமாகியது.

நேற்று இடம்பெற்ற இரு போட்டிக ளில் ஆரம்பப் போட்டியாக முல்லை வொறி யர்ஸ் அணி, முல்லை அக்னி அணி போட்டியிட்டிருந்தன. முல்லை அக்னி அணியினர் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தி ருந்தனர். முதலில் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய முல்லை வொறியர்ஸ் அணி யினர் 18.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குக ளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பதிலுக்கு துடுப்பெடுத் தாட களமிறங்கிய முல்லை அக்னி அணியினர் 11.1 பந்து பரிமாற்றங் களில் 2 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றி ருந்தது. ஆட்ட நாயகனாக முல்லை அக்னி அணியினைச் சேர்ந்த ரி.தயா னன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இரண்டாவது போட்டியாகக் குருந் தூர், முல்லை டைமண்ட் அணி போட்டியிட்டிரு ந்தன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குருந்தூர் அணியினர் முதலில் துடுப் பாட்டத்தைத் தெரிவு செய்து 18.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குக ளையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பதிலுக்குத் துடுப்பெடுத் தாட களமிறங்கிய முல்லை டைமண்ட் அணியினர் 14.5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றிருந்தனர். ஆட்ட நாயகனாக முல்லை டைமண்ட் அணி யினைச் சேர்ந்த ரி.உதயநேசன் தெரிவு செய்யப் பட்டார். (ம-7,299)

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 800 | 550 | 450 | 500-650 | 700 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 1100 | 1000 | 1000-1100 | 850 |
| தக்காளி | 250 | 300 | 250 | 220 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 200-250 | 200 |
| கோவா | 320 | 250 | 200 | 300 | 400 |
| கரட் | 450 | 600 | 350 | 550 | 700 |
| பூசணி | 120 | 120 | 150 | 70-80 | 160 |
| புடோல் | 200 | 250 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 200 | 150 | 150 | 120-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 300 | 200-400 | 600 |
| பெரிய வெங்காயம் | 250 | 120 | 250 | 170 | 250 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 400 | 250 | 350-400 | 600 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 650 | 500 | 700-750 | 800 |
| லீக்ஸ் | 350 | 360 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 500 | 400 | 400 | 400 | 500 |
| கறிமிளகாய் | 1200 | 700 | 600 | 750-800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 700 | 450 | 300 | 400 | 600 |
| கீரை – 1 பிடி | 100 | 120 | 120 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 300 | 150 | 250 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 260 | 180 | 150-230 | 180-230 |
| இராசவள்ளி | 550 | 400 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 400 | 250-300 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | [illegible] | 160 |

# எல்லாமே ஆட்டத்தின் ஒரு பகுதி தான்...



- காயம் காரணமாக வெளியேறிய சிவம் துபே
- இறக்கப்பட்ட ஹர்ஷித் ராணா
- அதிருப்தி வெளியிட்ட ஜோஸ் பட்லர்

இந்திய மற்றும் இங்கிலாந்து அணிக ளுக்கிடையிலான நான்காவது இரு பதுக்கு 20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த போட்டியில் இந்திய அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் 3-1 எனும் அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.

இந்தநிலையில் குறித்த போட்டியில் காயம் காரணமாக வெளியேறிய சிவம் துபேவிற்கு பதிலாக ஹர்ஷித் ராணா அணிக்குள் கொண்டுவரப்பட்டது நியா யமான விடயம் கிடையாது என இங் கிலாந்து அணித்தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

போட்டி நிறைவடைந்த பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் "நாங்கள் துடுப்பெடுத் தாட களமிறங்கியபோது இந்திய அணியில் ஹர்ஷித் ராணா உள் ளதை அவதா னித்தோம், இது தொடர்பில் கேட்டபோது சிவம் துபேவிற்கு மாற்றாக வந்துள்ளார் என கூறினார்கள்.

அப்போதே அதனை ஏற்க மறுத்தேன். இந்த நிலையில் நடுவர் இந்தியாவின் முடிவை ஏற்றுக் கொண்டதாகக் கூறிய தால், எதுவும் செய்ய முடியவில்லை. இவை யெல்லாம் ஆட்டத்தின் ஒரு பகுதி தான்" என ஜோஸ் பட்லர் குறிப்பிட்டார். (நி-8)

CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(3309)

Exponet Overseas consultant

No-125, Arasady Road, Jaffna.

071 415 0995
021 435 5113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சீனப் பொறியில் சிக்கும் இலங்கை...



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். குறித்த விஜயம் தொடர்பில் தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் இதழில் வெளியான கட்டுரை இங்கு அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ-ர்)

அண்டை நாடான இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்றதன் பின்னணியில் முக்கிய காரணமாக அமைந்தது சீனா விரித்த கடன் வலைதான். பொருளாதார நெருக்கடியில் தத்தளித்தபோது உடனடியாக உதவிக்கரம் நீட்டி, இலங்கையைச் சற்று ஆசுவாசப்படுத்தியது இந்தியாதான். ஆனால், அதையெல்லாம் சிறிதும் சிந்தித்துப் பார்க்காத இலங்கை, இந்தியாவை அச்சுறுத்தும் சீனாவின் பக்கம் மீண்டும் சாயத் தொடங்கியிருக்கிறது!

**இந்தியாவுக்குப் போட்டியாக வரவேற்பு?**

இலங்கையில் ஜனாதிபதிகளாகப் பதவியேற்பவர்கள் முதலில் இந்தியாவுக்கும் பின்னர் சீனாவுக்கும் பயணப்படுவது வழக்கம். அதன்படி, இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு வந்தார். இங்கு அவருக்கு இராணுவ அணிவகுப்புடன் சிவப்புக் கம்பளம் விரித்துச் சிறப்பான வரவேற்பளித்தார் குடியரசுத் தலைவர். பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்திய அநுர, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரையும் தனித்தனியே சந்தித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து சீனாவுக்குச் சென்றவருக்கு இந்தியாவுக்குப் போட்டியாக எப்போதும் இல்லாத வகையில் பிரமாண்ட சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. தனது அமைச்சர்களை வரிசையில் நிறுத்தி அனைவரையும் அநுரவுக்கு அறிமுகப்படுத்தினார் சீன ஜனாதிபதி ஜின்பிங். தலைநகர் பீஜிங்கில் மட்டுமல்லாமல் சீனாவின் முக்கிய மாகாணங்களுக்கு அநுரவை அழைத்துச் சென்று அவருக்கு அதீத முக்கியத்துவமளித்தது சீனா. சீன அரசுடனான பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார் அநுர. அதோடு, சீன நிறுவனங்களுடனான சில பல ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் ஹம்பாந்தோட்டையில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட விருக்கிறது சினொபெக் நிறுவனம். சர்வதேச அரசியல் நோக்கர்களோ, மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், ஹம்பாந்தோட்டையில் சீன நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் கடுமையாக எதிர்த்தார் அநுர. ஆனால், ஆட்சிக்கு வந்ததும் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறார். சிறிய நாடுகளை சீனா தனது முதலீடுகள் மூலமே கடன் பொறியில் சிக்கவைக்கும். அந்தப் பொறியில் இலங்கை மீண்டும் சிக்கினால் மெல்ல மெல்ல எழுந்துகொண்டிருக்கும் பொருளாதாரம் மீண்டும் விழத் தொடங்கும் என்கிறார்கள்.

**இந்தியாவுக்கு என்ன பாதிப்பு?**

எதிர்க்கட்சி வரிசையிலிருந்தபோது, இலங்கையை சீனாவின் காலனி நாடாக மாற்றிக்கொண்டிருக்கிறது அரசு எனக் கடுமையாக விமர்சித்தார் அநுர. ஆனால் ஆட்சிக்கு வந்த சில காலத்திலேயே அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் சீனாவின் பக்கம் சாய்ந்துவிட்டார். ரணில் விக்ரமசிங்க ஆட்சியில், சீன ஆராய்ச்சிக் கப்பலை இலங்கைக் கடற்பகுதியில் நிலைநிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தக் கப்பல் மூலம் தென்னிந்தியப் பகுதிகளை வேவு பார்க்க சீனா திட்டமிடுவதாகக் கருதிய இந்தியா கோபம்கொண்டது. இதனால், உடனடியாக சீனக் கப்பலை நிலைநிறுத்தத் தடைவிதித்தார் ரணில். ஆனால் அநுர அரசோ சீனக் கப்பல்கள் இலங்கை கடற்பகுதியில் நிலைநிறுத்த ஏதுவாக, சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையில் அநுர சீனாவுக்குச் செல்வதற்கு முன்பாகப் பல திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது. அதிலும் சீனாவுக்குச் சாதகமான திட்டங்களே அதிகம். குறிப்பாக, சீன அரசு ஊடகத்துடன் இலங்கை அரசு இணைந்து பணியாற்ற ஒப்புதல் வழங்கியிருக்கிறது அமைச்சரவை. இலங்கையின் தேசிய தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றை இயக்க நாட்டின் உச்சிப் பகுதியான பிதுருதலாகல மலையில் டெலிகம்யூனிகேஷன் டவர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. பலத்த பாதுகாப்புடன் இயங்கும் இந்தப் பகுதிக்கு, சம்பந்தமில்லாத நபர்கள் யாருமே செல்ல முடியாது. ஆனால், சீன அரசு ஊடகத்துடன் போடப்பட்டிருக்கும் ஒப்பந்தம், அங்கு சீன அரசு அதிகாரிகள் செல்ல வழிவகுக்கும். அங்கிருந்து இந்தியாவை வேவு பார்க்க முடியும் என்பதால், இது நிச்சயம் இந்திய அரசைக் கடும் கோபத்தில் ஆழ்த்தும்.

அண்டை நாடான இந்தியாவைப் பகைத்துக்கொள்வது எப்போதுமே இலங்கைக்கு நல்லதல்ல. ரணில் ஆட்சியிலிருந்தபோது இந்தியா, சீனா இரு நாடுகளையும் சமநிலையுடன் அணுகினார். ஆனால் அநுர, சீனா பக்கம் சாய்வது இலங்கைக்குப் பல சிக்கல்களை உண்டாக்கும். இது இந்தியாவை மட்டுமல்ல, சீனாவின் மீது கோபத்திலுள்ள அனைத்து நாடுகளுடனான உறவிலும் சிக்கலை உண்டாக்கும்.

ஜூனியர் விகடன்

# முடிவுகள் எட்டப்படாமல் முடிந்த அபிவிருத்திக்குழுக் கூட்டம்



- அபிமன்யு -

அபிவிருத்தி என்பது ஒரு பிரதேசத்தின் முதுகெலும்பு. அதை சரியான முறையில் செய்தால் மாத்திரமே அந்தத் தேசம் மீட்சியடையும். எமது பிரதேச அபிவிருத்தி தொடர்பிலும் அதன் வளர்ச்சிப் போக்குத் தொடர்பிலும் எம் அரச அதிகாரிகள் தூரநோக்குச் சிந்தனையுடன் செயற்பட்டால் மாத்திரமே எமது தேசம் மீட்சி பெறும். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் அரச அதிகாரிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள், ஊடகங்கள் பங்களிப்புடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்டம் தொடர்பில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பூரண அறிவுடன், எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லக்கூடியதான நிலை அதிகாரிகளிடம் காணப்படவில்லை என்பது வேதனையான விடயம். ஒரு நாட்டின் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் கூட்டம், அதில் பங்கு கொள்வதற்கு எந்தவிதமான ஆவணங்களும் இன்றி வெறுங்கையுடன் வந்து செல்வதை ஏற்றுவிட முடியாது.

அநேகமான ஜனாதிபதியின் கேள்விக்கு அதிகாரிகள் பதில் சொல்லாமல் அமைதியாய் இருந்தமை அபத்தம்.

அத்துடன் வடக்கிற்கு ஒதுக்கப்படும் நிதி பூரண பயன்பாடின்றி திருப்பி அனுப்பப்படுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று ஜனாதிபதி கூறியதைக் கேட்கும் போது பொறுப்புள்ள அரச திணைக்களங்களில் இப்படியும் நடக்குமா என்று எண்ணம் தோன்றியது.

வடக்கின் வளங்கள் கொள்ளையடிக்கப் படுவதாகவும் குறிப்பாக சுண்ணக்கல் அகழ்விற்கு முறையான நடைமுறை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் முன்வைத்தார். அதற்கு எந்தவிதமான தீர்வையோ பதிலையோ அவ்விடத்தில் ஜனாதிபதி வழங்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகளின் விடுதலை, தையிட்டி பௌத்த விகாரை என்பன தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அதற்கு தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

ஆக, யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் கோரிக்கைகள் நிறைந்த கூட்டமாக முடிந்ததே தவிர: முடிவுகளோ, தீர்வுகளோ எட்டப்பட்ட கூட்டமாக நிறைவடையவில்லை என்று கூறினால் அதை மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டலுவல்கள் அலகினால் 2025 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் வழங்கப்படவுள்ள கலைக்குரிசில், இளங்கலைஞர், சிறந்த-நூல் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு 2025.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்குக் கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவலுக்கு 021 205 4105 என்னும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது விண்ணப்பப்படிவங்களை www. np.gov.lk/ www.edumin. np.gov.lk என்னும் இணையத்தளங்களின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண பண்பாட்ட லுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லா.நிருபராஷ் அறிவித்துள்ளார். (நி-8)

• • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை, (வாய்ப்பாட்டிசை. பண்ணிசை, இசையமைப்பு) வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம் புல்லாங்குழல், மிருதங்கம் வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்து நடை) கிராமியக்கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி. போன்ற தொடர்புடைய கலைகள்) இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை. இசையமைப்பு.) ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக்கலைத் துறைகளுக்கானவை) வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட, ஏற்கனவே இளம் கலைஞருக்கான கலைத்துறைச்சான்றிதழ் மற்றும் இளங்கலைஞர் விருது பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 20.02. 2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (நி-8)

• • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்கு வழங்கப்படுகின்ற விருதாகிய யாழ் ரத்னா விருதுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு) வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்து நடை) கிராமியக்கலைகள் (கரகம், காவடி. கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு. பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்) இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு) ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக்கலைத் துறைகளுக்கானவை) வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவில் கலைப் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தினைக். கொண்ட 60 வயது பூர்த்தியடைந்தவர்களும் இதுவரை இவ் விருதினை பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்று பூர ணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையினை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 20.02. 2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (நி-8)

# ‘யாழ்பாடி’ மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள யாழ் பாடி 09 பிரதேச மலரானது ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளிவரவுள்ளது.

இம்மலருக்கு கவிதை. சிறுகதை, நூல் விமர்சனம். சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், நாடகஎழுத்துரு, ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மீகம், வரலாறு) சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்களாக அமைய வேண்டும்.

கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணனியில் தட்டச்சு பதிப்பாகவோ சமர்ப்பிக்க முடியும். கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் A4 தாளின் இருபக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும்

சுய படைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் ஆகாது.

மலர்க்குழுவின் தீர்மானத்துக்கமைய தரமான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடித வுறையின் இடது பக்க மூலையில் "யாழ்பாடி-09 பிரதேச மலர்" எனக்குறிப்பிட வேண்டும். ஆக்கங்களுடன் முழுப் பெயர் முகவரி. தொலைபேசி இலக்கத்துடன் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 20.02. 2025 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (நி-8)

## பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலிருந்து பெண் வீராங்கனைகள் பங்குபற்றுகின்ற கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டி நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணி தொடக்கம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.சமூக செயற்பாட்டு மைய பிரதம நிறைவேற்று அலுவலர் ந.சுகிர்தராஜ் அறிவித்துள்ளார். (நி-8)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொற்பதி சனசமூக நிலையம் நடாத்தும் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பொற்பதி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

# இராசிபலன்

02.02.2025
தை 20 ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 12.39 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 4.13 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரம்

வளவன்

**மேஷம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**கடகம்** விட்டுப்போன பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், எடுத்த காரியங்களில் அக்கறையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**ரிஷபம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செல்வாக்கு மேலோங்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படலாம், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள்.

உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லையென்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனவரியில் மட்டும்
# 149 வாகன விபத்துக்கள்
# 156 உயிரிழப்புகள்

## போக்குவரத்து பிரிவு பணிப்பாளர் தகவல்

**(கொழும்பு)**

**ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 149 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், 156 பேர் உயிரிழந்துள்ளதாக கொழும்பு போக்குவரத்து பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஞ்ரனகல தெரிவித்தார்.**

வாகன விபத்துக்கள் தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மருத்துவர் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2024 ஆம் ஆண்டு வரை நாட்டில் 84 இலட்சம் 54,513 வாகனங்கள், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அதிகளவானவை மோட்டார் சைக்கிள்களாகும்.




விபத்துகளால் 2022ஆம் ஆண்டு 2,540 , 2023ஆம் ஆண்டு 2,241 2024ஆம் ஆண்டு 2,381 மரணங்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் பார தூரமான சேதங்களை ஏற்படுத்திய 33,259 விபத்துகள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துக்கள் யாவும் விபத்துக்குள்ளானவர் உடல் அவயவங்களை இழந்ததும் மற்றும் எழுந்து நடமாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதுமான விபத்துகளாகும்.

இதேவேளை 2024ஆம் ஆண்டு 843 பாதசாரிகள், 738 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 157 வாகனங்களில் பின்னால் அமர்ந்து பயணித்தோர், 167 சாரதிகள், 309 பயணிகள், 160 துவிச்சக்கர வண்டி செலுத்துநர்கள் மற்றும் ஏனையோர் 6 பேர் என விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களே அதிகளவில் விபத்துகளால் மரணித்துள்ளனர்.(நி-8)





சுன்னாகம் - தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ மங்கள வாத்தியங்கள் முழங்க யானைகள், குதிரைகள் பவனியாக வலம் வந்து மஹாகும்பாபிஷேக கைங்கரியம் நிகழ்ப்பெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-சிவசாந்தன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் காலமாகிவிட்டார்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணியார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை- அதனை நிராகரித்த பேரவை- அதைத் தொடர்ந்து கலைப் பீடாதிபதி தனது பதவியை இராஜினாமாச் செய்தமை என்ற விவகாரம் ஒரு மாதிரியாக முடிவுக்கு வந்திருக்குது போல...

**விதானையார்:-** இப்போதைக்கு இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரலாம். ஆனால் எதிர்காலத்தில யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை சுமுகமாக நடத்துவதென்பது கடினமான காரியமாகத் தான் இருக்கும்.

**சாத்திரியார்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த பேராசிரியர் விக்னேஸ்வரனின்ர துணைவேந்தர் பதவிக் காலம் முடிவதற்கு முன்னதாக அவரின்ர பதவி வெறுதாக்கப்பட்டது.

உண்மையில யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தரின்ர பதவியை வெறுதாக்கிய போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேணும்.

ஆனால் அப்போது அது நடைபெறவில்லை.


அண்டைக்கு அதில ஆரம்பித்த கலாசாரம் இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில நீடிக்கத்தான் செய்யும்.

**மூப்பர்:-**விதானையார் ஏதோ சொல்லுறியள் ஆனால் எனக்கெண்டால் ஒண்டும் விளங்கல்ல.

**விதானையார்:-** இஞ்சே மூப்பர், எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில விரிவுரையாளர்களும் மாணவர்களும் முரண்பட்ட வரலாறு இதுவரை இருக்கவில்லை.

ஆனால் இப்ப அதுவும் தொடங்கிற்றுது.

உண்மையில மாணவர்கள் பிறழ்வான பாதையில செல்வதை ஒரு



## பெரும்பாலான அரச அலுவலகங்களில
## செப்படி வித்தை தான் நடக்குது

போதும் அனுமதிக்க முடியாது. அதேநேரம் விரிவுரையாளர்களும் மாணவர்களைப் பழிதீர்க்கிற வகையில செயற்படக் கூடாது.

இப்ப கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில ஏற்பட்ட நிலைமை துணை வேந்தருக்கு ஏவப்பட்ட அஸ்திரம் எண்டு கூடச் சொல்லப்படுகுது.

அதேவேளை பேரவையின்ர வெளிவாரி உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருக்குது.

வழமையில ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், ஏலவே இருந்த பேரவையைக் கலைத்து புதியவர்களை நியமிக்கிறது வழமை.

ஆகையால விரைவில யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவை கலைக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதேநேரம் புதிய பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின்ர பட்டியலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர ஒரு தரப்பு விரிவுரையாளர்கள் தயார் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

**சிறாப்பர்:-** அப்ப இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் ஜே.வி.பியின்ர செல்வாக்குப் பலப்படப் போகுது எண்டு சொல்லுறியள்.

**பண்டிதர்:-** தெரியாமல் தான் கேட்கிறன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் என்பது இப்போது காலாவதியாகிவிட்டது என்றும் அவர்களின் அறிக்கை செல்லுபடியற்றதென்றும் கூறப்படுதல்லோ அது சரியோ!

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா! ஒவ்வொரு பீடத்திலும் மாணவர் ஒன்றியத்தின்ர பதவிக் காலம் காலாவதியாகிவிட்டால், புதிய மாணவர் ஒன்றியத்தை சம்பந்தப்பட்ட நிர்வாகம் அமைக்க வேணும்.

அதில விடப்படுகின்ற காலதாமதம் தான் இப்படியான பிரச்சினைகளுக்குக் காரணம். அதேநேரம் ஒருமுறை நடந்த பொதுத் தேர்தலின் போது, ஒரு கட்சிக்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கையெழுத்திட்டு அறிக்கை விட்டவர்.

ஆனால் அப்போதும் அந்த மாணவர் ஒன்றியம் காலாவதியாகி இருந்தது.

இருந்தும் அது குறித்து அப்போது விரிவுரையாளர்கள் மௌனமாக இருந்தனர். அன்று மாணவர் ஒன்றியத்தின் பெயரால் ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவாக அறிக்கைவிட்ட போது, அந்த அறிக்கை செல்லாது. குறித்த மாணவர் ஒன்றியம் காலாவதியாகி விட்டது எண்டு கூறியிருந்தால், இப்ப அதை ஏற்க முடியும்.

இங்கு தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற ஒரு பெரும் சமுகம் அனைத்து விடயங்களிலும் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேணும்.

அப்போது தான் பிழைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது எவரும் வாய் திறந்து கதைக்க முடியாமல் இருக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமாகியது.நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வந்தவரல்லோ அவரின்ர வருகையால ஏதேனும் பயன் உண்டோ?

**பண்டிதர்:-** யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வருகிறார் என்பது எப்பவோ அறிவிக்கப்பட்டது.

அப்படியானால் ஜனாதிபதியிட்ட நாம் முன் வைக்க வேண்டிய கோரிக்கைகள் தொடர்பில தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்று கூடி ஆராய்ந்திருக்க வேண்டும்.

அப்படிக் கூடி ஆராய்ந்திருந்தால், கூட்டத்தில தேவையில்லாத கதைகளும் வீண்வார்த்தைகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

அதோட எங்களிட்ட இருக்கிற ஒற்றுமையீனத்தையும் நாங்கள் வெளிக்காட்ட வேண்டிய தேவை இருந்திருக்காது.

**மூப்பர்:-** பண்டிதர் சொல்லுறது உண்மை தான். எங்களிட்டத் தானே அப்படியான ஒற்றுமை கிடையாது.

**விதானையார்:-** சரி, எங்கட அரசியல்வாதிகள் தான் ஒன்று கூடி என்னென்ன கோரிக்கைகளை முன் வைப்பது எண்டு தீர்மானிக்காவிட்டாலும் எங்கட அரச அதிகாரிகள் ஒன்று கூடி எங்கட பிரதேசத்திற்கான தேவைகளை முன்னுரிமையின் அடிப்படையில் பட்டியல் படுத்தியிருக்கலாம்.

**கங்காணியார்:-** இதெல்லாம் நடக்கிற காரியமோ. யாழ்ப்பாணக் கச்சேரியில நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில பங்குபற்றின ஜனாதிபதி அநுர, யாழ்ப்பாணத்தில உள்ள வீதிகளின்ர- புனரமைக்கப்பட வேண்டிய வீதிகளின்ர எண்ணிக்கை சார்ந்த விபரங்களைக் கேட்டவராம்.

ஆனால் அங்க இருந்த வீதிகள் மற்றும் உப வீதிகள் சார்ந்த துறையினர் அமைதி காத்ததாகக் கேள்வி, என்ன செய்கிறது. இது தான் எங்கட நிலைமை.

**மூப்பர்:-** பார்த்தியளோ எங்கட ஊர்களில எத்தனை வீதிகள் சேதமடைந்து கிடக்குது. இருந்தும் அது பற்றி ஜனாதிபதியிட்ட எடுத்துக் கூறுவதற்கு சரியான விபரங்கள் எங்களிட்ட இல்லை எனும் போது எங்கட அரச நிர்வாகம் எப்படியாக இருக்குதென்பது தெரியுது தானே!

**சிறாப்பர்:-** கடவுளே! தீவகத்தில மண்டைதீவையும் அல்லைப்பிட்டியையும் இணைக்கிற வீதி கிடக்கிற கோலத்தை ஒருக்காப் போய்ப் பாருங்க.

மழைகாலத்தில அந்த வீதி குளமாகிப் போகுது. இதால அந்த மக்கள் படுகிற அவஸ்தை கொஞ்சமல்ல. இருந்தும் அது பற்றிய தகவல்களைத் தெரிவிக்கிறதுக்கு சம்பந்தப்பட்ட அரச அமைப்புகளால முடியவில்லை.

**வாத்தியார்:-** இஞ்சே சிறாப்பர் எங்கட அரச நிறுவனங்களில கணிசமானவற்றில செப்படி வித்தை தான் நடக்குது.

இதுகளைப் பார்க்கிறதுக்கு இஞ்ச ஆரு இருக்கினம்.

இவ்வாறு கூறியபடி வாத்தியார் பெருமூச்சு விட, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வாயில்லா ஜீவனைத் தூக்கிலிட்ட சம்பவம் தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்



வல்வெட்டித்துறையில் கூடிய மக்களைப் பார்க்க இனித் தமிழ்க்கட்சிகளை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் போலவே?

**1948 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழருக்கு நாடு கிடைக்காமல் போனது எப்படி வியாசரே?**

தனுசன்-ஆனைக்கோட்டை

இந்தியாவில் வெள்ளையினத்துக்கு எதிரான போராட்டத்தின் எதிரொலியே இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கக் காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம் அதுதான் உண்மை.

வெள்ளையர்கள் வெளியேறும் போது இலங்கையில் வாழும் நாம் அனைவரும் ஒன்றாய், ஒற்றுமையாய் ஒரே இலங்கைக்குள் வாழ்கிறோம் எனக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியே தமிழினத்தின் இன்றைய நிலைக்கு காரணம்.

அன்று நாடு பிரிக்கப்பட்டிருந்தால் நாம் தனி நாட்டில் அந்நிய அத்துமீறல் இன்றி நிம்மதியாய் வாழ்ந்திருக்கலாம்.

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி வாசஸ்தலத்திற்கு மாதாந்தம் 45 இலட்சம் செலவாகிறதாமே?**

ஜெயபாலன்-சுந்தர்மடம்

அரிசிக்கும் தேங்காய்க்கும் மக்கள் வரிசையில் நிற்க, அவர்கள் வரிப்பணத்தில் சுகபோகங்களை அனுபவித்தே ஆவேன் என்று அடம்பிடிப்பது ஒருநாளும் அறமன்று.
மாதாந்தம் 45 இலட்சம் என்பது 112 குடும்பங்களின் மாத வருமானம்.
இப்படி எத்தனை 45 இலட்சங்களை அள்ளி இறைக்கிறார்களோ தெரியவில்லையே.
நான் மக்கள் தலைவன் என்று கூறி மக்கள் பலத்தில் சுகபோகம் அனுபவிப்பதை விடுத்து மக்கள் பசியாற வழி செய்தால் மக்கள் மனங்களில் நின்றுவிடலாம்.

**வல்வெட்டித்துறையில் கூடிய மக்களைப் பார்க்க இனித் தமிழ்க்கட்சிகளை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் போலவே?**

சுதன்-குப்பிழான்

எம்மவர்கள் பட்டத்திற்கும் பதவிக்கும் பணம் சேர்ப்பதற்கும் அரசியல் செய்தால் மக்கள் வேறு எதைச் செய்வார்கள்.

கொடும் போரில் சிக்கிய தமிழினம் சொத்திழந்து, சுகமிழந்து, சொந்தபந்தம் தானிழந்து நிர்க்கதியாய் நின்றபோது அரசுடன் ஒட்டியிருந்து கோடிகளில் சொத்துச் சேர்த்து சுகம் அனுபவித்தவர்களை மக்களால் தலைவன் என்று ஏற்க முடியுமா?

எவன் மக்களுடன் மக்களுக்காக மக்கள் மயமாகிறானோ அவனே தலைவனாகிறான்.

தமிழினத்தின் தலைமைப்பதவி இன்றும் வெற்றிடமாகவே இருக்கிறது.

**வாழ்வில் வெற்றிபெற ஹாட்வேர்க் முக்கியமா சிமாட் வேர்க் முக்கியமா வியாசரே?**

பிரவீஸ்-பருத்தித்துறை

Hard work, Smart work என எதுவும் இல்லை. நாம் செய்யும் வேலையை எப்படிச் செய்கிறோம் என்பதிலேயே அது தங்கியுள்ளது.

மூட்டை சுமக்கும் தொழிலாளி லொறியில் இருந்து மூட்டையைத் தலையில் தூக்கிச் செல்லும் போது கையில் ஒரு குச்சியை எடுத்துச் செல்வார். அதை மூடை இறக்கும் இடத்தில் சேகரிப்பார்.

இறுதியில் எத்தனை குச்சி அவ்விடத்தில் இருக்கிறதோ அவ்வளவு மூடைகளை இறக்கினேன் என கணக்கைக்கொடுத்து அதற்குப் பணம் வாங்குவார்.

Hard work ஐ Smart work ஆக செய்வது எமது கைகளிலே தங்கியுள்ளது.

**மூத்த பிள்ளைக்கும் கடைசிப் பிள்ளைக்கும் என்ன வித்தியாசம்?**

மிருந்தி- நவிண்டில்

அப்போது எனக்கு வயது எட்டு. கடைக்குச் சென்ற எனது அண்ணன் அழுது கொண்டு வந்தான். அம்மா, ஏன் அழுகிறாய் என்று கேட்க, கடையினால் வரும் வழியில் யாரோ தன்னை அடித்து விட்டதாகக் கூறினான்.

நான் அண்ணனைக் கூட்டிக்கொண்டு அங்கு சென்றேன். இந்தா இவன்தான் அடித்தான் என 10 வயது மதிக்கத்தக்க ஒருவனை அண்ணன் இனங்காட்டினான்.

மட்டை வேலிக்குள்ளால் அவன் கையைப் பிடித்து இழுத்து பலமாகக் கடித்தேன். அவன் அம்மா என்று அலறினான். அண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு ஓட்டம் எடுத்தேன்.




**துன்மார்க்கனால் வேதனைகள் பெருகுமா வியாசரே?**

குமார் - யாழ்ப்பாணம்

தீய எண்ணங்கள், கெட்ட சிந்தனைகள் எம் மனதில் மேலோங்கினால் அதுவே எம் வாழ்வில் நடக்கும்.

நாம் எப்போதும் எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியமான விடயங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சிறுபிள்ளை ஒன்று கண்ணாடிக் கிளாசை தவறுதலாக உடைத்து விட்டது. இதற்கு பிள்ளையை உறுக்கி, அதட்டி, அடித்து, வெருட்டினால் அந்தப் பிள்ளைக்கு கிளாசை எடுக்கக் கூடாது என்ற எண்ணமே தோன்றும்.

இது உடையக் கூடியது. கவனமாகக் கையாள வேண்டும். இப்போது பார் உடைந்து விட்டது. இந்தத் துண்டுகள் காலில் குற்றினால் காயம் ஏற்பட்டுவிடுமல்லவா? அவற்றை கவனமாக அப்புறப்படுத்த வேண்டும் என்று மென்மையாகச் சொல்லிப் பாருங்கள். பிள்ளையின் மனவிருத்தி அதிகமாவதை உணருவீர்கள்.

**பெண் என்பவள் அன்பானவளா? வம்பானவளா?**

பாலச்சந்திரன்-சாந்தை

பெண்மை என்பது உலகின் அச்சாணி. முழுமுதற் கடவுள் சிவனாக இருப்பினும் எம்மை தாங்கும் பூமியை பூமாதேவி என்றே போற்றுகின்றோம்.

இது உலக தோற்றத்திற்கு பெண்ணே முதன்மை என்பதை நிறுவுகிறது.

பெண்களை மின்சாரத்திற்கு ஒப்பிட்டனர் எம் முன்னோர். ஏன் தெரியுமா? முறை தவறித் தொட்டால் மின்சாரம் உயிரையே எடுத்துவிடும். இது போலத்தான் பெண்மையும்.

**வாயில்லா ஜீவனைத் தூக்கிலிட்ட சம்பவம் தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?**

சுந்தரம்-துன்னாலை

மனித மனங்கள் எவ்வளவுக்கு கோரத்துடன் இருக்கிறது என்பதை அவ்வப்போது இவ்வாறான சம்பவங்கள் காட்டிக் கொள்ளும்.

இலங்கையில் தூக்குத் தண்டனை நிறுத்தி எத்தனை ஆண்டுகள் கடந்து விட்டன.

இந்நிலையில் வாயில்லா ஜீவன் ஒன்றை தூக்கிலிட்டு கொலை செய்கிறார்கள் எனின் அந்த வன்மத்தை என்னவென்று சொல்லி விட முடியும்.

பெரும்போர் முடிவுற்று, ஒரு இனமே அழிவுற்று, ஆயிரம் யுகத்திற்கு மீள முடியாத நிலை இருக்கையில் நாம் இவ்வாறு செய்யலாமா? அப்படிச் செய்தால் இறைவன் எம்மை உய்ய விடுவானா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளி

## சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளிவிழா குறித்து சிவபூமி அறக்கட்டளைத் தலைவரின் செய்தி



1999 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற உலக சைவத் திருக்கோவில்கள் மாநாட்டில் பங்குபற்றும் பேறு சிறியேனுக்குக் கிடைத்தது. எந்தவித ஊதியமும் பெறாமல் சமயப் பிரசங்கம் செய்யும் சிறியேனுக்கு லண்டனில் பல அன்பளிப்புகள் தந்தனர். அவற்றை பொது நன்மைக்கு பயன்படுத்த வேண்டும் என்று யான் ஆசைப்பட்டேன். அந் நிதியைத் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கும் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க நிறைவாழ்வு இல்லத்திற்கும் பகிர்ந்து கொடுத்தேன். 2000 ஆம் ஆண்டில் தொடர்ந்து வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்புக் கிட்டியது. லண்டனிலும் பலர் எனது பணிகளுக்கு உதவ முன் வந்தனர். அவ்வேளையில் புற்றுநோயின் காரணமாக செஞ்சிலுவைக் கப்பலில் மகரகம வைத்தியசாலைக்குச் செல்லும் வசதி குறைந்த நோயாளர்களுக்குச் சிறுதொகை பணத்தைப் பகிர்ந்தளிக்க முடிவு செய்தேன். அப்பொழுது என் மனதில் தோன்றிய எண்ணம் தான் சிவபூமி என்ற அமைப்பு உருவாக வித்திட்டது. யாழ் போதனா வைத்தியசாலையின் கண் வைத்தியநிபுணர் ச.குகதாசன் அவர்களை யும் எனது மைத்துனரும் யாழ் போதனா வைத்தியசாலையின் கணக்காளருமான திரு மு.விஜயரகுநாதன் அவர்களையும் இணைத்துக்கொண்டு வைத்தியசாலைப் பணிப்பாளர் Dr. செல்வி கனகரத்தினம் அம்மையாரின் அனுசரணையோடு சிவபூமி அன்பளிப்பு என்ற பெயரில் பயணம் செய்யும் நோயாளிகளுக்கு தலா 5000 ரூபாய் வீதம் உதவி செய்து கொண்டிருந்தோம். 28.02.2000 ஆம் ஆண்டு சிவபூமி என்ற பெயரில் இப்பணி தொடங்கியது. 2002 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளை என்ற பெயரில் 9 அங்கத்த வர்களைக் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்கி 2003 ஆம் ஆண்டு சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையைக் கோண்டாவிலில் நிறுவினோம். 2004 ஆம் ஆண்டு சிவபூமி பாடசாலை புதிய கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எமது அறக்கட்டளையின் முதல் கைங்கரியமான பாடசாலையைத் திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

தெய்வத்திருவருளால் சிவபூமி அறக்கட்டளை 25 ஆண்டுகளைச் சந்திக்கின்ற வேளையில் பாரிய ஒரு நிறுவனமாக இன்று பிரகாசிக கின்றது. இவ் அறக்கட்டளை இலங்கைப் பாராளுமன்றத்தில் அறக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெற்று வர்த்தமானியில் வெளிப் படுத்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எமது அறக் கட்டளை நிதி அறிக்கை அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறு வனத்தால் ஒவ்வொரு மாதமும் பரிசீலிக்கப்பட்டு வருடந்தோறும் கணக் கறிக்கை கணக்காய்வு நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

எமது செயற்றிட்டங்கள் யாவும் இந்து கலாசாரத் திணைக்களம், இலங்கை சமூக சேவைகள் திணைக்களம் என அனைத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எமது நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பினால் 25 ஆண்டுகள் வெற்றிகரமாக எமது பயணம் தொடர்கிறது. எமக்கு பொருள் வளங்களைத் தந்தவர்களும் எமது நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் நன்றிக்குரியவர்கள். வெள்ளி விழா ஆண்டிலும் எமக்கு அசையாச் சொத்துகளை வழங்கிய பெரியவர்களின் விபரங்களும் அறக்கட்டளையின் ஆதனங்களும் இன் நன்நாளில் வெளிப்படுத்தப்படுகிறது. எங்கள் பணியைக் கண்டு எம் மீது நம்பிக்கை கொண்டு பலர் தொடர்ந்து உதவுகிறார்கள். இறையருளால் தாமாகவே வந்து உதவுகிறார்கள். புலம்பெயர்ந்து நம்மவர்கள் வாழும் தேசங்களுக்கெல்லாம் சென்று சிறியேன் உரையாற்றியதற்கு நன்றியாக வழங்கப்பட்ட காணிக்கைகள் யாவும் இப் பெரும்பணிக்குப் பேருதவியாக அமைந்தமை மறக்க முடியாதது. எத்தனை பிறவி எடுத்து இவர்க ளுக்கெல்லாம் யான் நன்றி சொல்வேன். வையகம் உள்ளவரை சிவபூமி அறக்கட்டளை வாழ வேண்டும். எதிர்காலத் தலைமுறை சீராக இப்பணிகளை வழிநடத்த வேண்டும். தெல்லிப்பழை துர்க்கை அம்மன், திருவாசக அரண்மனையில் வீற்றிருக்கும் சிவதெட்சணாமூர்த்தி எமக்குத் தந்த வல்லமையை என்றும் காத்திட பிரார்த்தித்து அமை கிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை,**
**தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்**

## சிவபூமி அறக்கட்டளையின் அ

1. யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் விளையாட்டு மைதானத்திற்குரிய எட்டுப் பரப்புக் காணியானது கொழும்பில் வசிக்கும் கனகசபை சந்திரகுமார் என்பவரிடமிருந்து சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் சொந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பெற்றது. இக் காணி யானது 2004 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

2. கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை ஆரம்பிப்பதற்காக முதலில் ஒன்பது பரப்புக் காணியானது வைத்திய நிபுணர் பாலசுப்ரமணியம் நினைவாக அவர் மனைவி லீலாவதியினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

3. சுழிபுரத்தில் முதியோர் இல்லம் அமையப் பெற்றுள்ள 14 பரப்புக்காணியானது சண்முக சுந்தரம் குடும்பத்தினரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு இதனை அமெரிக்கா புளோரி டாவைச் சேர்ந்த கிருஷ்ணர் பாலசந்திரன் அவர்கள் கொள்வனவு செய்ய உதவினார். 2006 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

4. கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அமைந்துள்ள வடக்குப்புற நான்கு பரப்புக் காணியானது வைத்தியநிபுணர் ரட்ணசிங்கம் நினைவாக அவர் மனைவி தர்மதேவி ரட்ணசிங்கம் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

5. சுழிபுரத்தில் நெல்லியான் விவசாய நிலமானது துரையப்பா. சரஸ்வதி நடராஜா பெயரால் மாலினி சோமஸ்கந்தன் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. 191 பரப்பைச் சேர்ந்த இக் காணியானது 2009 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

6. கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அமையப்பெற்றுள்ள காணியின் மத்திய பகுதியில் ஐந்து பரப்புக் காணியானது ஷாலினி இரத்தினசிங்கம் என்பவரிடம் அறக்கட்டளை நிதியிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

7. கீரிமலையில் தண்டிகைக் கனகராயர் மடம் இருந்த 14 பரப்புக்காணியானது விஸ்வநாதன் குடும்பத்தினரால் சிவபூமி அறக்கட்டளைக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இங்கு சிவபூமி மடம் மற்றும் சிவபூமி யாத்திரிகர் மடம் போன்றன சிறப்பாக இயங்கிவருகின்றது.

8. கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையின் கிழக்குப் புற இரண்டு பரப்புக் காணியானது ஷாலினி ரத்னசிங்கம் என்பவரிடமிருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

9. கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையின் கிழக்குப் புறத்தில் உள்ள 1 1/4 பரப்புக்காணியானது இராமலிங்கம் மனோகரிதேவியிடம் சிவபூமி அறக்கட்டளை நிதியிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

10. சுழிபுரம் முதியோர் இல்லத்தின் கிழக்குப்புற 15 பரப்புக் காணியானது துரைசிங்கம் ரகு என்பவரிடமிருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

11. கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையில் தற்போது தொழிற்பயிற்சிக்கூடம் இயங்குகின்ற 1 1/2 பரப்புக் காணியானது தங்கராசா குடும்பத்தினரிடமிருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

12. கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையில் தொழிற்பயிற்சி கூடம் அமைக்கப்பட்டுள்ள பிறிதொரு 1 பரப்புக்காணியானது ராஜரத்தினம் குடும்பத்தினரிடமிருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

13. இயக்கச்சியில் உள்ள ரோகினித் தோட்டம் செய்கை பண்ணப்படுகின்ற 15 ஏக்கர் விவசாய நிலமானது முன்னாள் அதிபர் பேராயிரவர் மற்றும் முன்னாள் ஆசிரியர் ஜானகி பேராயிரவன் பெயரால் ரோகினி பேராயிரவனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

14. நாவற்குழியில் உள்ள ஐயனார் கோயில் உட்பட்ட தென்னந்தோப்பு 64 பரப்புக் காணியானது சண்முகநாதன் சத்தியதேவி பெயரால் கனடாவைச் சேர்ந்த சுப்ரமணியம் பிறேமச்சந்திரன் மற்றும் கௌசல்யா மூலம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இக்காணி 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.இங்கு சிவபூமி கோசாலை இயங்குவது குறிப்பிடத்தக்கது.

15. கீரிமலையில் அண்ணா கோபி நிறுவன ஏழு பரப்புக்காணியானது நடராசா இராசமலர் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இக்காணியானது 2014 ஆம் ஆண்டில் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

16. ஆனைக்கோட்டையில் அபயம் அறக்கட்டளை அமைந்துள்ள ஐந்து பரப்புக்காணியானது வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அம்பலவாணரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

17. கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலை அமையப் பெற்றுள்ள எட்டு பரப்புக்காணியானது திரு.ராஜரத்தினம் என்பவரிடமிருந்து 2015 அறக்கட்டளை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

18. இயக்கச்சியில் உள்ள கொற்றாண்டவர் குளப் பகுதியில் உள்ள கோட்டம் எனும் 15 ஏக்கர் விவசாய நிலக் காணி ஆனது அமரசோதி குகதர்ஷன் என்பவரிடமிருந்து அறக்கட்டளை நிதியில் கொள்வனவு செய்யப்பட்டது. இக்காணி 2015 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

19. வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான கீரிமலையில் மணியவளை அல்லது சுப்பிரமணிய சமாதி அடங்கிய 1 1/2 காணியானது கொழும்பில் வசிக்கும் சுதந்திரநாதன் நிரஞ்சலாதேவி குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2015ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

20. நாவற்குழி வயல் காணியானது 45 பரப்பு (இரு துண்டுகளாக) பொன்னம்பலம் பத்மதேவி என்பவரின் பெயரால் கௌசல்யா என்பவரால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

21. நாவற்குழியில் திருவாசக அரண்மனை ஆலயம் அமைக்கப்பட்ட மூன்று பரப்புக்காணியானது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் வைத்திய நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதியினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.

22. கிளிநொச்சி மாவட்டத்தில் இயக்கச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஏக்கர் விவசாய நிலமானது அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுவாமிநாதன் பெயரால் சுவாமிநாதன் அருள்வாசன், இலியாஸ் சுவேந்திரா ஆகியோரால் பெறுமதி மிக்க காணியானது குறைந்த விலைக்கு சிவபூமி அறக்கட்டளைக்கென வழங்கப்பட்டது. இக்காணியானது 2016 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

23. நாயன்மார்கட்டுப்பகுதியிலுள்ள மூன்று பரப்புக்காணியானது விக்னேஸ்வரி மகாதேவா, கேதாரேஸ்வரி தியாகராஜா அவர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்டு 2017இல் பதிவு செய்யப்பட்டது.

24. இயக்கச்சியில் கண்டி வீதியில் A9 வீதியில் அமைந்துள்ள 78 பரப்புக்காணியானது முன்னாள் சுங்கவரி அதிகாரி சிவகுரு சபாநந்தனினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2017இல் பதிவு செய்யப்பட்டது. இலங்கை பாதுகாப்பு பிரிவினரின் பாவனையிலுள்ளது. குறித்த காணி விடுவிக்கும் பட்சத்தில் எமது அறக்கட்டளை பணிகளுக்காகக் காத்திருக்கிறது.

25. நாவற்குழியில் நான்கு பரப்புக் காணியானது ரட்ணசபாபதி சுதந்திரராஜ் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இக்காணியானது 2018இல் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. இந் நான்கு பரப்புக் காணியில் இரண்டு பரப்புக் காணியானது ஆறு திருமுருகன் ஐயாவின் நல்லெண்ணத்தில் வாழ்வாதார ரீதியில் [illegible] மனைவியான விஜயகுமார் வினோதினி



அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

26. நாவற்குழியில் காணப்படுகின்ற அருங்காட்சியக பத்து பரப்
என்பவரிடமிருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து கொள்வன
அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

27. கீரிமலையில் கிருஷ்ணபிள்ளை மடம் என அழைக்கப்படுகி
முன்னாள் அதிபர் கிருஷ்ணபிள்ளை குடும்பத்தின் அன்ப
உத்தியோகத்தர்) என்பவரின் ஊடாக வழங்கப்பட்டு 2018இல்

28. கோண்டாவில் கிழக்குப் பகுதியில் 14 1/2 பரப்புக் காணியானது
பாலசுந்தரம் ஹம்சாயினி ஆகியோரால் அன்பளிப்பாக வழங்கப்

29. நாவற்குழியில் சிவபூமி அறக்கட்டளையினரால் மூலி
காணியானது யாழ்ப்பாணம் காவன்னா திருவோண சுக்கிரவார
கந்தர்மடத்தைச் சேர்ந்த நடராஜா ஸ்ரீவிஜயா, யோகேஸ்வரி எ
இக் காணியானது 2019 ஆம் ஆண்டில் சிவபூமி அறக்கட்டளை

30. வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட காங்கே
யாழ்ப்பாணம் காவன்னா திருவோண சுக்கிரவார சத்திரத்திற்
நடராஜா ஸ்ரீவிஜயா மற்றும் யோகேஸ்வரி அவர்களால் அன்ப
அறக்கட்டளையின் பதிவு செய்யப்பட்டது. இலங்கை பாதுகாப்பு பி
விடுவிக்கும் பட்சத்தில் எமது அறக்கட்டளை பணிகளுக்காகக் கா

31. மயிலிட்டியில் உள்ள 26 பரப்புக் காணியானது மகேசன் சு
அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக் காணியானது 2019 இல்
செய்யப்பட்டது. இங்கு சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் அமைக்க

32. நாவற்குழியில் திருவாசக அரண்மனை அமையப் பெற்றுள்
காணியானது ரமணா புஷ்பரத்தினம் என்பவரிடம் இருந்து
செய்யப்பட்டது. குறித்த காணியில் எமது அறக்கட்டளையின் பண
நிறைவு செய்யப்பெற்றுள்ளது.

33. இயக்கச்சியில் அன்னபூரணி என பெயரிடப்பட்டு செய்கை ப
லண்டனைச் சேர்ந்த பாலசிங்கம் நந்தபாலன் என்பவரால் அ
செய்யப்பட்டது. இந் நிலத்தில் செய்கை பண்ணப்படும் நெல் சி
மனவிருத்திப் பாடசாலை, முதியோர் இல்லம், முதியோர் ஆச்சி
பெரிதும் உதவுகின்றது.

34. உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள 24 பரப்புக்காணி
ஊடாக அம்பிகை, நாகேந்திரம் சிவரத்தினம் அவர்களால் அன்
பதிவு செய்யப்பட்டது.

35. மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம் அமையப்பெற்றுள்ள
திரு சு. சொர்ணலிங்கம் (இணுவில்) புவனேஸ்வரி (மாவிட்டபு
கமலாகரன் (அவுஸ்ரேலியா) ராகவன், வாசுதேவன், ரஜி
வழங்கப்பட்டு 2021 இல் பதிவு செய்யப்பட்டது.

36. கலகாவில் கண்டி ஆச்சிரமம் காணப்படுகின்ற 1 1/2 ஏக்கர் கா
இருந்து அறக்கட்டளை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்

37. சுதுமலையில் இரண்டு பரப்புக் காணியானது கனகசப
வழங்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் ப

38. மேலும் உரும்பிராயில் அமையப் பெற்றுள்ள மூன்று ப
அனுஷ்யா பெயரால் உரும்பிராயைச் சேர்ந்த ரோகினி பேரா
ஒப்பந்த அடிப்படையில் சிவபூமி அறக்கட்டளைக்கென வழங்கப்

39. யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியர் வீதியில் அமைந்துள்ள நா
சேர்ந்த வைத்தியநிபுணர் ஜோஹினி ரட்ணசபாபதியினரால் அ
பதிவு செய்யப்பட்டது.

40. இணுவில் பூவோடைப் பகுதியில் அமைந்துள்ள 12 ப
கமலேஸ்வரன் குடும்பத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டு 20

41. கொழும்பு பம்பலப்பட்டியில் சிவபூமி நிலையம் அமையப்பெ
மாடிக் கட்டிடம் ஆனது மயில்வாகனம் சபாரட்ணம் பெயரால் அ
அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2022 இல் பதிவு செ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிவிழா சிறப்புமலர் (2000-2025)

## அசையா சொத்துக்கள் விபரம்



க பத்து பரப்புக் காணியானது ஜெயரத்தினம் கலைவாணி
கொள்வனவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு சிவபூமி

ழக்கப்படுகின்ற சிவபூமிக்குரிய 19 பரப்புக் காணியானது
ர் அன்பளிப்பால் தியாகலிங்கம் (இளைப்பாறிய வங்கி
5 2018இல் பதிவு செய்யப்பட்டது.

ாணியானது கனடாவில் வசிக்கும் பாலசுந்தரம் தக்ஷாயினி,
க வழங்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.

ால் மூலிகைத் தோட்டம் செய்கை பண்ணப்படுகின்ற
சுக்கிரவார சத்திரத்திற்குரிய 20 ஏக்கர் நிலப் பகுதியானது
கேஸ்வரி என்பவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
றக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

ட்ட காங்கேசன் துறையில் 105 பரப்புக்காணியானது
சத்திரத்திற்குரிய நிலப் பகுதியை கந்தர்மடத்தைச் சேர்ந்த
ால் அன்பளிப்புச் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு சிவபூமி
ாதுகாப்பு பிரிவினரின் பாவனையிலுள்ளது. குறித்த காணி
க்காகக் காத்திருக்கிறது.

மகேசன் சுகுமார், மகேசன் ஜெயக்குமார் ஆகியோரால்
2019 இல் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு
ம் அமைக்கப்பெற்று சிறப்பாக இயங்கிவருகின்றது.

பப் பெற்றுள்ள காணியின் மேற்குப் பகுதியில் எட்டு பரப்புக்
ம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2019இல் பதிவு
ளயின் பணியான சிவபூமி கலாச்சார அரங்கு கட்டப்பெற்று

5 செய்கை பண்ணப்படுகின்ற 81 ஏக்கர் வயல் நிலமானது
ர்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2019இல் பதிவு
நம் நெல் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் இயங்குகின்ற
யோர் ஆச்சிரமம் போன்றவற்றின் உணவுத் தேவைக்கு

ரப்புக்காணியானது லண்டன் சிவயோகம் அறக்கட்டளை
களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு

பெற்றுள்ள 4 1/2 பரப்பு காணியானது வைத்திய கலாநிதி
(மாவிட்டபுரம்) தம்பதிகள் நினைவாக வைத்திய நிபுணர்
வன். ரஜிவி சிவபாலன் ஆகியோரால் அன்பளிப்பாக

/2 ஏக்கர் காணியானது மாசிலாமணி அஜீவா என்பவரிடம்
செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

பு கனகசபை சீவரத்தினம் என்பவரால் அன்பளிப்பாக
ளையின் பதிவு செய்யப்பட்டது.

மூன்று பரப்புக் காணியானது ஏகாம்பரம் விக்னராஜா,
கினி பேராயிரவன் என்பவரால் முப்பது வருட குத்தகை
ா வழங்கப்பட்டு 2022 இல் பதிவு செய்யப்பட்டது.

ந்துள்ள நான்கு பரப்பு நிலப்பகுதியானது நியூசிலாந்தைச்
னரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு

ுள்ள 12 பரப்புக்காணியானது இணுவிலைச் சேர்ந்த
யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

மையப்பெற்றுள்ள 4.9 பேர்ச் நிலத்தோடு கூடிய மூன்று
பெயரால் அவர் மனைவி திருமதி. சபாரட்ணம் திரவியம்
் பதிவு செய்யப்பட்டது.

42. நாவற்குழியில் மறவன்புலவு பகுதியில் உள்ள 19 பரப்பு வயல் காணியானது அனுஷ்யா விக்னராஜா பெயரால் ரோகினி பேராயிரவன் என்பவரால் 2032 ஆம் ஆண்டு வரையிலான குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் வழங்கப்பட்டு 2022 பதிவு செய்யப்பட்டது.

43. அரியாலையில் பூம்புகாரில் உள்ள 26 பரப்புக் காணியானது இரு துண்டுகளாகப் பிரித்து (12 பரப்பு, 14 பரப்பு) ஆஸ்திரேலியாவில் வசிக்கும் குலசேகரம் குலேன் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

44. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் உள்ள குமாரசாமி வீதியில் உள்ள 13/4 பரப்புக் காணியானது ஜெயகரன் இராமநாதன், ஜெயகரன் தாட்சாயினி அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2022இல் பதிவு செய்யப்பட்டது.

45. தட்டாதெருச் சந்திப் பகுதியில் உள்ள 1 3/4 பரப்பு காணியானது தம்பி நடராஜா சாந்தலட்சுமி அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. குறித்த காணியில் சிவபூமி தமிழியல் ஆராய்ச்சி நிலையம் அமைய காத்திருக்கிறது.

46. கீரிமலையில் முதியோர் ஆச்சிரமம் அமைந்துள்ள 12 பரப்புக் காணியில் 10 1/2 பரப்புக் காணியானது கொங்காசுதன் இந்திராணி அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் 1 1/2 பரப்புக் காணியானது கொங்காசுதன் இந்திராணி அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இக் காணியானது 2022 இல் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டது.

47. குப்பிளான் பகுதியில் அமைந்துள்ள 7 1/2 பரப்புக் காணியானது கனகசபை கதிர்காமநாதன், சாரதாம்பாள் கதிர்காமநாதன் பெயரால் பதிவாளர் கனகசபை மோகனராஜலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் இக் காணி பதிவு செய்யப்பட்டது.

48. சாவகச்சேரியில் உள்ள 12 பரப்புக்காணியானது லண்டனைச் சேர்ந்த வைத்திய நிபுணர் கனகசபை கதிர்காமநாதன், ரத்தினேஸ்வரி, மகன் சபேசன், மகள் அருந்ததி ஆகியோரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக் காணியானது 2023இல் சிவபூமி அறக் கட்டளை பெயரில் பதிவு செய்யப்பட்டது. விரைவில் சாவகச்சேரியில் மாற்றுவலுவுடைய சிறார்களுக்கான பாடசாலை அமைக்க சிவபூமி அறக்கட்டளை காத்திருக்கிறது.

49. யாழ்ப்பாணத்தில் முதலாம் குறுக்குத்தெரு வீதியில் அமைந்துள்ள 3 3/4 பரப்புக் காணியானது சாவித்திரிதேவி பாலசுப்பிரமணியம், வைத்திய நிபுணர் அப்புப்பிள்ளை பாலசுப்பிரமணியம் பெயரால் பிரபல சட்டத்தரணி கனக் ஈஸ்வரனினால் அன்புளிப்பாக வழங்கப்பட்டது. குறித்த காணியில் யாழ்ப்பாண வைத்தியசாலையின் கருவள சிகிச்சை நிலையம் அமைக்கப்பெற்று நடைபெற்று வருகின்றது.

50. இணுவிலில் அபயம் வைத்தியசாலை இயங்கி வருகின்ற ஐந்து பரப்புக்காணியானது கௌரி ஆனந்தராஜாவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2023 சிவபூமி அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

51. வட்டுக்கோட்டையில் தேவாரமடம் காணப்படுகின்ற 8 1/2 பரப்புக்காணியானது சிவகாமிப் பிள்ளை திருச்சிற்றம்பலம், மகாலிங்கேஸ்வரி பெயரால் லண்டனைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இக்காணி 2024 ஆம் ஆண்டு சிவபூமி அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

52. மாசியப்பட்டிப் பகுதியில் காணப்படுகின்ற 7 1/2 பரப்புக்காணியானது பத்மினி பால சுந்தரம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது .

53. ஊர்காவற்துறை கோவில்பற்று பகுதியில் வேலணையில் உள்ள வீடும் 45 பரப்புக்காணியானது நொத்தாரிசு கந்தையா சுப்ரமணியம் குடும்பத்தின் பெயரால் ஆருரன், கீதா ஆகியோரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

54. தற்போது கனடாவில் வசித்து வருகின்ற திரு.திருமதி சிவ.பஞ்சலிங்கம் என்பவர் குப்பிளானில் உள்ள தனது 7 பரப்புக் காணியை விற்று அப் பணத்தை சிவபூமி அறக்கட்டளைக்கட்டளைப் பணிகளுக்காக வழங்கி வைத்தார்.

55. கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள 2 பரப்புக் காணியை உரிமையாளரான செல்லத்துரை கமலாதேவி விற்பனை செய்து அப் பணத்தை சிவபூமி அறக்கட்டளைக்காக வழங்கி வைத்தார்.

56. குப்பிளானில் ஞானஆச்சிரமம் இயங்கி வருகின்ற காணியுடனான வீடும் திருமதி ஞானலட்சுமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி நினைவாக திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

57. கந்தர்மடம் மணற்றறை வீதி பகுதியில் உள்ள 1பரப்பும் 9 குழியும் கொண்ட காணியை திருமதி வைத்திலிங்கம் கனகேஸ்வரி என்பவர் விற்பனை செய்து அப்பணத்தை நாவற்குழி அருங்காட்சியகத்தின் மூன்றாம் மாடி கட்டிடப் பணிக்காக அன்பளிப்பு செய்தார்.

58. யாழ் நுழைவாயில் பகுதியான நாவற்குழி செம்மணிப் பகுதியில் இரண்டு ஏக்கர் நிலமானது அரசாங்கத்தின் நீண்ட கால குத்தகை அடிப்படையில் சிவபூமி அறக்கட்டளைக்கென வழங்கி வைக்கப்பட்டது. இங்கு தற்போது சிவலிங்கம் வைத்து பூஜிக்கப்பட்டு வருவதோடு எதிர்காலத்தில் இங்கு கலாசார மண்டபம் ஒன்றும் அமையப் பெற உள்ளது. அது மாத்திரமன்றி பழைமையை நினைவு கூறும் கலாச்சார அம்சங்களுடனான மன்னர்களின் அரண்மனை போன்ற அமைப்பிலான கட்டடங்களும் அமையப் பெற உள்ளது.

59. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய உயர்திரு அ. உமா மகேஸ்வரன் அவர்களின் உழைப்பால் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் இரண்டு ஏக்கர் அரச நிலமானது நீண்டகால குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் சிவபூமி அறக்கட்டளைக்கு என வழங்கி வைக்கப்பட்டது. இக்காணியில் எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுவலுவுடைய சிறார்களுக்கான பாடசாலை ஒன்று அமைக்கப்பட இருப்பதோடு முல்லைத்தீவு மண்ணில் சிவபூமி அறக்கட்டளை தனது சமூக, சமயப் பணிகளை ஆற்றுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

60. கண்டி வீதி, முறுகண்டிப் பகுதியில் இரண்டு ஏக்கர் அரசாங்க நிலமானது சிவபூமி அறக்கட்டளைக்காக வழங்கி வைக்கப்பட்டது. இங்கும் எதிர்காலத்தில் பாடசாலை அமைக்கப்பட இருப்பதோடு சிவபூமி அறக்கட்டளையானது தனது பணிகளை ஆற்ற திட்டமிட்ட வண்ணம் உள்ளது.

61. பிரதேச செயலராகப் பணியாற்றிய திரு.பிருந்தாகரன் அவர்களின் முயற்சியால் கண்டி வீதி, உமையாள்புரம், கிளிநொச்சி பகுதியில் இரண்டு ஏக்கர் அரச காணியானது நீண்டகால குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் சிவபூமி அறக்கட்டளைக்காக வழங்கி வைக்கப்பட்டது. எதிர்காலத்தில் சிவபூமி அறக்கட்டளை தனது பணிகளை கிளிநொச்சியில் தொடர இக்காணியானது பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

62. மாதகலில் 5 பரப்பும் ஐந்து குழியும் கொண்ட காணி கலாநிதி சதாசிவம் கனகசபை, வைத்திய கலாநிதி சிவபாதநாயகி கனகசபை அவர்களால் விற்பனை செய்யப்பட்டு அந்த நிதி அவருக்கு பின்னால் சிவபூமி அறக்கட்டளைக்கென வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

63. கருவம்பனை தெல்லிப்பழை பகுதியில் 27 பரப்புக்காணியானது தற்போது முதியோர் இல்லத்தில் வசித்து வருகின்ற செல்வி நரசிங்கன் மல்லிகாதேவி அவர்களால் விற்பனை செய்யப்பட்டு அந்த நிதியானது சிவபூமி அறக்கட்டளையின் பணிகளுக்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, சிவபூமி அறக்கட்டளை எனும் ஆலமரமானது நாடெங்கும் கிளை பரப்பி பலருக்கு நிழல் வழங்க இத்தகைய நல்லுள்ளங்களின் பங்கும் அளப்பெரியது. அது மாத்திரமன்றி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை அயராது பாடுபடுகின்ற சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் நிறுவுனருமான கலாநிதி ஆறு திருமுருகன் ஐயாவின் பங்கும் அளப்பெரியது. இவருடைய நாவன்மையினால் கிடைத்த பணம் அறக்கட்டளை விஸ்[illegible]

### அ.சிவபூமியின் திருக்கோயில்கள்

1. சிவபூமி திருவாசக அரண்மனை - நாவற்குழி
2. சிவபூமி தெட்சிணாமூர்த்தி திருக்கோயில் - நாவற்குழி
3. சிவபூமி திருமந்திர அரண்மனை -கொக்கட்டிச்சோலை
4. சிவபூமி ஐயனார் கோயில் -குடியேற்றத்திட்டம், நாவற்குழி
5. சிவபூமி சிவலிங்கப் பெருமான் - செம்மணி நுழைவாயில்

### ஆ. சிவபூமியின் பாடசாலைகள்

6. சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை -கோண்டாவில்
7. சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை- கிளிநொச்சி
8. சிவபூமி கோணேச்சரம் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை- திருகோணமலை
9. சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை - கோண்டாவில்

### இ. சிவபூமியின் மடங்கள் மற்றும் ஆச்சிரமங்கள்

10. சிவபூமி மடம் - கீரிமலை
11. சிவபூமி யாத்திரீகர் மடம் - கீரிமலை
12. சிவபூமி ஞான ஆச்சிரமம் - குப்பிளான்
13. சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் - மயிலிட்டி
14. சிவபூமி ஆச்சிரமம்- கலஹா, கண்டி
15. சிவபூமி நிலையம் - பம்பலப்பிட்டி, கொழும்பு
16. சிவபூமி தேவார மடம் - வட்டுக்கோட்டை

### ஈ. சிவபூமியின் முதியோர் இல்லங்கள்

17. சிவபூமி முதியோர் இல்லம் - சுழிபுரம்
18. சிவபூமி முதியோர் ஆச்சிரமம் - கீரிமலை

### உ. சிவபூமியின் தனித்துவமான உருவாக்கங்கள்

19. சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட்காட்சியகம் - நாவற்குழி
20. சிவபூமி யாழ்ப்பாணம் திருக்குறள் வளாகம் - மாவிட்டபுரம்
21. சிவபூமி கலைக்களஞ்சியம்- கீரிமலை
22. சிவபூமி அச்சகமும் சிவபூமி பத்திரிகையும்

### ஊ. அபயம் அறக்கட்டளை உடன் இணைந்த சிவபூமியின் மருத்துவ நிலையங்கள்

23. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - ஆனைக்கோட்டை
24. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் -இயக்கச்சி
25. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - மயிலிட்டி
26. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - இணுவில்
27. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - கலஹா, கண்டி
28. சிவபூமி அபயம் கரு வளர்ச்சி சிகிச்சை நிலையம் - யாழ்ப்பாணம்

### எ. விவசாயப் பண்ணைகள்

29. சிவபூமி விவசாயப்பண்ணை- நெல்லியான், சுழிபுரம்
30. சிவபூமி பஞ்சாமிர்த தோட்டம் - கோவில் வயல், இயக்கச்சி
31. சிவபூமி கோட்டம் பண்ணை - கொற்றாண்டார்குளம்
32. சிவபூமி அன்னபூரணித் தோட்டம் -இயக்கச்சி
33. சிவபூமி ரோகினி தென்னந்தோட்டம் -இயக்கச்சி
34. சிவபூமி செவ்விளநீர்த் தோட்டம் - நாவற்குழி
35. சிவபூமி மூலிகைத் தோட்டம் -நாவற்குழி
36. சிவபூமி பூம்புகார் தோட்டம் - அரியாலை
37. சிவபூமி வயல் - மறவன்புலவு

### ஏ. விலங்குகள் சரணாலயம்

38. சிவபூமி நாய்கள் சரணாலயம் -இயக்கச்சி (தற்போது மூடப்பட்டுள்ளது)
39. சிவபூமி கோசாலை - சுழிபுரம்
40. சிவபூமி கோசாலை - நாவற்குழி

### ஐ. சிவபூமியின் சிலைகள்

41. ஆறுமுக நாவலர் சிலைகள் - கீரிமலை, திருக்கேதீச்சரம் மற்றும் சம்பூர்
42. தியான நிலை சிவபெருமான் சிலை - திருக்கேதீச்சரம்

### ஒ. ஏனைய பணிகள்

43. சிவபூமி கல்வி நிதியம்
44. சிவபூமி மருத்துவ நிதியம்
45. சிவபூமி வாழ்வாதார நிதியம்

### நடைபெறும் திருப்பணி வேலைகளும் எதிர்கால பணிகளும்

46. சிவபூமி திருவாசக அரங்கம் - நாவற்குழி
47. சிவபூமி செம்மணி கலாசார வரவேற்பு நிலையம்
48. சிவபூமி தமிழியல் ஆராய்ச்சி நிலையம் - யாழ்ப்பாணம்

(C-2177)

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமியின் வெள்ளிவிழாப் பரிசாக உதயமாகும் யாழ்ப்பாணம் சிவபூமி திருக்குறள் வளாகம்

11ம் பக்கத் தொடர்ச்சி...

20 வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு சென்ற போது திருவள்ளுவர் கோட்டத்தைத் தரிசித்தேன். கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவரின் உருவச்சிலையைக் கண்டு வியந்தேன். இவையெல்லாம் எங்கள் மண்ணிலும் உருவாக வேண்டும் என்று அகத்தில் சிந்தித்தேன். திருவண்ணாமலை வீதியில் சித்தர் ஒருவரின் உயர்ந்த உபதேசத்தினால் தற்துணிவு கொண்டு நாவற்குழியில் திருவாசக அரண்மனை அமைக்கும் பணியை மேற்கொண்டேன். ஆன்மீகப் பெரியோர்களின் அருளாசியால் எந்த ஒரு பொருள் வளமும் இல்லாத சிறியேன் அருள் வளத்தின் மீது கொண்ட நம்பிக்கையினால் திருவாசகம் முழுவதையும் 2018 ஆம் ஆண்டு கருங்கல்லில் பதித்து திருவாசக அரண்மனை அமைக்கும் பேறு கிட்டியது. தொடர்ந்து கிழக்கு இலங்கையில் ஓர் வரலாற்றுப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் சிந்தையில் நிறைந்தது. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் கோயில் வளாகத்தில் 3000 திருமந்திரத்தையும் கருங்கல்லில் பதிப்பித்து 2023 ஆம் ஆண்டு திருமந்திர அரண்மனையை அமைத்து மகிழ்ந்தேன்.

திருக்குறளுக்கு ஒரு வளாகத்தை அமைத்து 1330 திருக்குறளையும் கருங்கல்லில் பதிக்க வேண்டும் என்கின்ற கனவு இப்போது நனவாகி இருக்கின்றது. அவுஸ்திரேலியாவில் வாழும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வைத்தியநிபுணர் திரு.சொர்ணலிங்கம் கமலாகரன் அவர்கள் தானாக முன் வந்து வழங்கிய நிலத்தை இப்பணிக்கு பயன்படுத்த திட்டமிட்டோம். சிவபூமி அறக்கட்டளையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் திருக்குறளுக்கு மதிப்பளித்து இம்முயற்சியை ஆதரித்தனர். பல இலட்சம் ரூபா இப்பணிக்குத் தேவை. தெய்வத்திருவருளால் கைகூடும் என்ற நம்பிக்கையோடு பாரிய பணியை நான்கு ஆண்டுகளுக்கு முதல் ஆரம்பித்தோம். எனினும் கொரோனா என்கின்ற கொடிய நோய் உலகத்தை ஆட்கொண்ட காரணத்தால் எமது பணி தாமதிக்க வேண்டி வந்தது. சென்ற செப்ரெம்பர் மாதம் மீண்டும் முயற்சி செய்யத் தொடங்கினோம். துர்க்கை அம்பாளின் திருவருளாலும் மாவிட்டபுரம் கந்தனின் நல்லருளாலும் இப் பாரிய திருப்பணி 2025 இல் நிறைவேறியது.

இப்பாரிய பணிக்கு நிதியுதவி அளிப்பதற்கு எனது பிரியத்திற்குரிய நண்பரும் லண்டன் அபயம் அறக்கட்டளையின் தலைவருமாகிய வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன் அவர்களை நாடினோம். வைத்திய நிபுணர் பார்த்தீபன் அவர்கள் அமெரிக்காவில் வசிக்கும் வைத்திய நிபுணர் கேதீஸ்வரன் அவர்களை எமக்கு அறிமுகம் செய்து அவருடனான தொடர்பை ஏற்படுத்தி வைத்தார். Dr.கேதீஸ்வரன் அவர்கள் திருக்குறள் வளாகத்தின் தளமாடியை அமைப்பதற்கு நிதி வழங்க முன்வந்தார். மேல் மாடியை அமைப்பதற்கு லண்டன் அபயம் அறக்கட்டளை ஊடாக வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வி.யோகநாதன் தம்பதிகள் நிதி வழங்க முன் வந்தார்கள். மேலும் வள்ளுவரின் உருவச் சிலையை கருங்கல்லில் வடிப்பதற்கு என்றும் எமக்கு உதவுகின்ற லண்டனில் வசிக்கும் திரு சூ.பாலசிங்கம் அவர்கள் உதவினார். கடந்த ஒன்றரை வருட காலமாக திருக்குறளைக் கருங்கல்லில் பதிக்கும் வேலையை கிளிநொச்சியில் வசிக்கும் திரு. வினோத் அவர்கள் அயராது உழைத்து நிறைவேற்றியுள்ளார். திருக்குறள் முழுவதையும் கருங்கல்லில் பதிக்கும் செலவை கொழும்பில் வசிக்கும் இரு சகோதரிகள் தங்கள் தந்தை புஷ்பநாதன் பெயரில் உதவமுன்வந்தார்கள்.

இப்பாரிய கட்டுமானத்தை படம் வரைந்து சிறப்பாக உதவியவர் கட்டிட நிர்மாணக் கலைஞர் திரு. குணசிங்கம் அவர்கள். அவுஸ்திரேலியாவில் வாழும் பிரபலமான கட்டிடக்கலை நிபுணர் இவர். இவரால் வரையப்பட்ட வரைபடத்திற்கு அமைய தெல்லிப்பழை கொல்லன்கலட்டியில் வசிக்கும் கட்டட ஒப்பந்தக்காரர் திரு. செல்வகுமார் (சூரி) அவர்கள் சிறப்பாக நிறைவேற்றித் தந்துள்ளார்கள்.

இப்பாரிய பணி நிறைவேறுவதற்கு அனுமதி வழங்கிய வலி வடக்கு பிரதேச சபையினருக்கும் நன்றி கூற வேண்டியது எம் கடமை. திருக்குறள் ஆராய்ச்சி நூல் நிலையம் அமைவதற்கு புதுடெல்லியில் த்னது பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் திரு. மகாசேனன் அவர்கள் பல மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்களை தேடி எடுத்து உதவினார். மேலும் யாழ். விஸ்ரா விஷன் நிறுவன அதிபர் சிவஜீவன், தெல்லிப்பழை திரு.வே.இந்திரன் போன்றவர்கள் எமது வளாகம் முழுமையாக காட்சிப்படுத்துவதற்கு தம் கைவண்ணத்தால் உதவியுள்ளனர். சிற்பக் கலைஞர் க.புருஷோத்தமனின் கலைஞர் குழாம் கட்டிட சிற்ப வேலைகளை பொறுப்பெடுத்து சிறப்பாக நிறை வேற்றினர்.

சிவபூமி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில் அறக்கட்டளையின் வெள்ளி விழாப் பரிசாக திருக்குறள் வளாகம் இம்மண்ணிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இவ் வளாகத்தை என்றும் காப்பாற்ற வேண்டியது எதிர்கால சந்ததியின் கடமையாகும். தெய்வத்திருவருளால் நிறைவேறியுள்ள இப்பணி எமது தலைமுறைக்கு பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை,**
**தலைவர், தெல்லிப்பழைத் துர்க்காதேவி தேவஸ்தானம்.**

(C-2177)



# ஆச்சி அறிவுரை

# அன்புள்ள பேத்திக்கு,

உன் பாட்டியோட whatsapp மெசேஜ். கடிதம் எழுதுற காலத்துல நான் பிறந்தேன். நீயோ ஸ்மார்ட்போன் காலத்துல பிறந்தவ. உனக்கு ஒரு தகவல் சொல்லணும்னா அதை வாட்ஸ்அப்ல அனுப்புனா மட்டும்தான் உன் கவனத்துக்கு வரும்னு உங்க அம்மாவோட போன்ல இருந்து இந்த மெசேஜை அனுப்புறேன்.
வேலை விஷயமா உலகத்தையே சுத்துறவ நீ. வேலை முடிச்சு களைச்சிப் போய் படுக்கையில விழுறப்போ கொஞ்ச நேரம் சோஷியல் மீடியா பார்ப்பியே... அப்போ இந்த whatsapp மெசேஜை நீ கட்டாயம் படிப்பேங்கிற நம்பிக்கையில இதை நான் டைப் பண்ண ஆரம்பிக்கிறேன்.

நான் பொறந்தது ஒரு குக்கிராமத்துல. வாழ்க்கைப்பட்டதும் அதே மாதிரி ஒரு குக்கிராமத்துலதான். என் பிறந்த வீட்லயும் சரி புகுந்த வீட்லயும் சரி. மலஜலம் போக ஒரு மறைவிடம் எனக்கு வாய்க்கல. என் வயசு ஒத்த எல்லா பொண்ணுங்களுக்கும் அப்போ அதுதான் தலைவிதி.

எங்க ஊரு ஆம்பளைங்களுக்கு எல்லாம் ரெண்டுக்குப் போறது காலைக்கடன். ஆனா பொம்பளைகளுக்கு எல்லாம் அது இரவுக்கடன். ஊரடங்குன பிறகு ஒரு லாந்தரோ, இல்ல ஒரு டார்ச் லைட்டோ துணைக்கு எடுத்துக்கிட்டு கும்பலா போவோம். அப்படித்தான் ஒருநாள் தங்கச்சி அவசரத்துக்கு நானும் கூட போனேன். எங்க பின்னாடி கேட்ட காலடிச் சத்தத்தை பேயோ, பூதமோன்னு நம்புற அறியாப் பருவம் அது. அந்த பூதங்க கிட்ட இருந்து எப்படியோ நான் தப்பிப் பிழைச்சேன். ஆனா, என் பின்னாடி பிறந்தவ மாட்டிக்கிட்டா. தலை துவண்டு சரிஞ்சு கிடந்தவளை தூக்கிட்டு வந்து "பாம்பு கடிச்சி செத்துட்டா"ன்னு அழுதுட்டே புதைச்சுட்டாங்க. பின்னாடி வந்தது பூதமில்ல, கடிச்சது பாம்புமில்லன்னு எனக்கு புரியறதுக்கே பல வருஷம் ஆகிப்போச்சு.

எனக்கும் கல்யாணமாச்சு. என் வயித்துல உங்க அம்மா வந்து பொறந்தா. அப்பவே நான் முடிவு பண்ணிட்டேன், அவ மறைவிடம் தேடி போறதுக்கு முன்னாடியே ஓலை தடுப்புலயாவது ஒரு கக்கூஸ கட்டணும்னு. உங்க அம்மா வளர்ந்தா. என் தீர்மானமும் அவள மாதிரியே வளர்ந்து நின்னுச்சு. என் மகளுக்கு ஒரு மறைவிடம் வேணும்னு நான் கேட்ட அன்னிக்கு, உன் தாத்தா எனக்கு சொன்ன அதே பதிலை தன் பொண்ணு விஷயத்துலயும் சொல்லிடுவாருன்னு ரொம்ப பயந்தேன். என்ன இருந்தாலும் உங்க அம்மா அவர் பெத்த பொண்ணு இல்லையா? உடனடியா ஒரு குழியும் பக்கத்துக்கு ஒண்ணா ரெண்டு செங்கல்லும் வெச்சு தென்னம் ஓலையில மறைப்ப கட்டினாரு. என் தங்கச்சிய அந்த ராத்திரியில விட்டுட்டு ஓடி வந்த பிறகு, நான் நிம்மதியா தூங்குனது அன்னிக்குத்தான்.

வாஷ் ரூம், ரெஸ்ட் ரூம்னு நுனி நாக்குல சொல்ற உனக்கு இந்த பாட்டியோட கஷ்டம் புரியுமோ என்னவோ... ஆனா, ஆம்பிளைங்க விஷயத்துல எனக்கு கிடைச்ச அனுபவத்தை வெச்சித்தானே, நான் உனக்கு சொல்ல வந்ததை சொல்ல முடியும். நான் கொல்லைக்குப் போக பயந்தேன். உங்கம்மா தென்னை ஓலை மறைப்புல இருந்த ஓட்டைகளுக்கு பயந்தா. நீ இப்போ ரெஸ்ட் ரூம்ல இருக்க கேமராக்களுக்கு பயந்துகிட்டு இருக்க. எல்லா ஆம்பளைங்களும் இப்படிக் கிடையாதுதான். எனக்கும் அந்த நியாயம் தெரியும். ஆனா, ஒரு சொம்பு பாலுக்கு ஒரு துளி விஷமே அதிகமில்லையா..?

என் பத்தாம் கிளாஸ் அறிவுக்கு எட்டுன வரைக்கும் நான் சில விஷயங்களை உனக்கு சொல்ல ஆசப்படுறேன். மன்னராட்சியோ, மக்களாட்சியோ நீயும் நானும் இந்த சமூகத்துக்கு வெறும் பொருட்கள் மட்டும்தான். தோற்றுப்போன மன்னனோட மனைவியில ஆரம்பிச்சு அந்த நாட்டுல இருக்கிற அத்தனை பெண்களையும் ஜெயிச்ச மன்னனும் அவன் சேனைகளும் பெண்டாளுவாங்கலாம்.

உலகத்தையே சுத்தி வர நீ "நல்லவன், கெட்டவன்" தெரிஞ்சு பழகு. உனக்கு ஒரு பாதுகாப்பு கலையையும் சேர்த்து பழகு. பாத்ரூம் டைல்ஸ்ல கேமரா இருக்கான்னு கண்டுபிடிக்க பழகு. உன்னை பாதுகாக்கிற நம்பர்களை உன் செல்போன்ல சேமிக்கப் பழகு. நமக்கெல்லாம் அந்த மாதிரி பிரச்சினை வராதுங்கிற கண்மூடித்தனமான நம்பிக்கையை கைவிடப் பழகு. கோயிலுக்குப் போனாலும் கடவுள் பார்த்துப்பாருன்னு அவர் மேல பாரத்தை போடாம உன் சுயபுத்தியை நம்பப் பழகு. நெருப்புன்னா வாய் சுட்டுடாது. உனக்கே அப்படியொரு வன்முறை நடந்திடுச்சின்னா அது உனக்கான அவமானமில்ல... அது தப்பு செஞ்சவனோட அவமானம் மட்டுமே. மத்தபடி நீ இன்னும் உன் வேலையில பல படிகள் முன்னேற என்னோட ஆசிர்வாதங்கள்...

**லவ் யூ உன் பாட்டி...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

42

இதனை இன்று ஜே.வி.பி.யின் அடுத்த தலைவர்களான சனத் என்பவரிடம் அல்லது பியதிலகளிடம் கூறுக என விஜயவீர தகவல் அனுப்பினார். கல்முனை நீதி மன்றத்தில் சோம ஸ்ரீயும் பிரேமரத்னவும் எதிர்பார்த்தது மாதிரி விடுதலையாகினர். விஜயவீர மீண்டும் கோட்டைச்சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்.

விஜயவீரவின் தகவல் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டது. திட்டம் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்குச் சிலர் அனுப்பப்பட்டனர்.

28 ஆம் திகதி எஸ். டி. பண்டாரநாயக்க கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம், யாழ்ப்பாணத்திலிருக்கும் தன் நண்பர் பாஸ்கரன் என்பவரை அழைத்தார். காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வருவதாகவும் புகையிரத நிலையத்தில் சந்திக்குமாறும் தகவல் கொடுத்தார். பாஸ்கரன் அவரை யாழ்ப்பாணப் புகையிரதநிலையத்தில் சந்தித்தார், பண்டாரநாயக்கவுடன் மஞ்சு என்பவரும் வந்திருந்தார். பாஸ்கரனின் காரில் ஏறி அவரின் வீடு சென்றனர். சுன்னாகத்தைச் சேர்ந்த நாகரத்தினம் என்பவரையும் சந்தித்தனர். மறுநாள் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்குச் சென்று விஜயவீரவைச் சந்திக்க முயன்றனர். அனுமதி வழங்கப்படவில்லை அதனால் பண்டாரநாயக்க கொழும்பு திரும்பிச்செல்ல நேர்ந்தது. ஏப்ரில் 1 ஆம் திகதி மாத்தயா, யாழ்ப்பாணத்திற்கு வந்து காரை நகருக்குச் சென்று, திலகரத்ன என்ற கடற்படை வீரனைச் சந்தித்தார்.


கடற்படை வீரர்களில் சிலர் விஜயவீரவை விடுவிக்க உதவுவதாகக் கூறினர். ஏப்பிரல் 3 ஆம் திகதி, மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்த மஞ்சு. பாஸ்கரனைச் சந்தித்து தனக்கு கொஞ்சம் டைனமயிற் வெடி குண்டுகள் செய்யத் தேவை எனக் கேட்டார். அவரைப் பாஸ்கரன், வேலாயுதம் என்பவரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார்.மஞ்சு கேட்ட டைனமயிற் கிடைக்கவில்லை அவர் கொழும்புக்குத் திரும்பிச்சென்றார்.

விஜயவீரவைச் சிறையுடைத்து விடுவிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நிலைகொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடந்தேறின ஏப்ரில் 5 ஆம் திகதி யாழ்ப்பாணக்கோட்டைச் சிறைச்சாலை தாக்குவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஏப்பிரல் 5 ஆம் திததி அதிகாலை கொழும்பிலிருந்து வித்தியோதய மாணவர்கள், ஆயுதங்களை மறைவாக்கிய படி ஈபேட் சில்வா கம்பனியாரின் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர்.

250 கைக்குண்டுகள் யாழ்தேவி வழி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தத் தாக்குதல் அணிக்குத் தலைமை தாங்கி லால் சோம ஸ்ரீ வந்தார். இன்னொரு பிரிவினர் பியதிலக தலைமையில் 100 பேர் கொண்ட குழுவாக பஸ்சில் வந்தனர்.

(தொடரும்...)

# கடல் புறா




காலத்தின் பதிவு 137

கூலவாணிகன் புத்தி மேலும் மேலும் குழம்பத் தொடங்கியது. தன் நிலையைப் பற்றியே பெரும் சந்தேகம் அடைந்தான் அவன். இருப்பினும் சமாளித்துக்கொண்டு "பலவர்மன் விருந்து வைக்கும் நிலையில் இல்லை, உனக்கே தெரியும் அது?" என்று கூறினான் சேந்தன்.

வேறு எப்படி இருந்தான் சேந்தா? மஞ்சத்தில் குப்புற விழுந்து கிடந்தான்.

கொலை செய்யப்பட்டா? இருக்கலாம். ஏன் இருக்கலாம்? அவன் முதுகில் குருதி மண்டிக் கிடந்தது.

கொலை செய்யப்பட்டிருந்தால் ஒருவேளை அந்தக் கொலையை நான் செய்தேன் என்றுகூடச் சொல்லுவாய் போலிருக்கிறது?"

இதைக் கேட்டதும் இடி இடியென நகைத்த அமீர், "ஏன் சேந்தா? அந்தக் கொலையை நீ செய்திருக்கக் கூடாதா? நீயும்தானே அறையிலிருந்ததாகச் சொல்கிறாய்?" என்று சிரிப்புக்கிடையே கேட்கவும் செய்தான்.

நான் பிறகுதான் வந்தேன் என்றான் சேந்தன் சீற்றத்துடன். அப்பிச் சொல்வது நீ. இந்த நாட்டு நீதிபதிகள் ஒப்புக்கொள்ள வேண்டுமே?" என்றான் அமீர். அமீர்! விளையாடாதே, கொலை செய்தது நானல்ல. உனக்கே தெரி யும் அது.

## இரகசியத்தின் திறவுகோல்

இப்படித் திரும்பத் திரும்பத் தன்னைக் கேலி செய்து ஏளனத்துடன் பேசிய அமீர்மீது எரிந்து விழுந்தான் சேந்தன். "வேறு யாரும் அங்கில்லை பலவர்மன் குருதி பாய்க் குப்புறக் கிடக்கிறான். இரண்டும் இரண்டும் நான்கு அல்லவா?" என்றான்.

எனக்கு முன்பு நீதானி ருந்தாய் அந்த அறையில்" என்று குழறினான் சேந்தன்.

அமீர். "அதைச் சொல்ல வேண்டியது நீ அல்ல," என்றான்வேறு யார்? என்றான் சேந்தன். "படைத்தலைவர்," பளிச்சென்று வந்தது அமீரின் பதில். மேலும் சொன்னான் அமீர், கொலை செய்ததைப் பற்றி அஞ்சாதே சேந்தா! உன்னை நானும் படைத் தலைவரும் கைவிட மாட்டோம். போயும் போயும் யாரைக் கொலை செய்து விட்டாய்? எதிரியைத்தானே?"

பரிதாபத்தை நாடும் பார்வையொன்றைக் கூல வாணிகள் படைத் தலைவனை நோக்கி வீசினான். இதுவரை அவ்விருவர் பேச்சிலும் குறுக்கிடாமல் கேட்டு வந்த இளையபல்லவன் பஞ்சணையிலிருந்து மெல்ல எழுந்து கூலவாணிகன் அருகில் வந்து "சேந்தா! என்ன இன்று காலையில் ஏதேதோ உளறுகிறாய்? யார் யாரைக் கொலை செய்தது? நேற்றிரவு முழுவதும் அமீர் இந்த மாளிகைப் பக்கமே வரவில்லையே? காட்டுப் பகுதியில் பூர்வகுடிகளின் நடமாட்டம் அதிகமாயிருக்கிறது. இரவு முழுவதும் அங்கல்லவா காவலில் இருந்திருக்கிறான் அமீர். ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டு, கூல வாணிகன் தோளிலும் கையை வைத்து, என்ன ஆயிற்று நான் சொன்ன வேலை? என்றும் விசாரித்தான்.

கூலவாணிகன் என்ன சொல்வதென்று அறியாமல் விழித்தான். மீண்டும் பழைய விடயங்களைச் சொல்ல ஆரம்பித்து, நான் சொல்வதெல்லாம் உண்மை. நம்புங்கள் படைத்தலைவரே, உங்கள் கட்டளைப்படி நான் பலவர்மன் அறைக்குள் நுழைந்ததும் உண்மை. அங்கு. என்று தொடர்ந்ததை இடைமறித்த இளையபல்லவன், பலவர்மன் கொல்லப்பட்டுக் குருதியுடன் குப்புறக் கிடந்தான். பிறகு அமீர் உன்னைச் சந்தித்தான். சரி சரி," என்று கூறி, "நீ பலவர்மன் அறைக்குப் போகவே இல்லை. ஒன்று நீ குடித்திருக்க வேண்டும். அல்லது உறங்கி கனவு கண்டிருக்க வேண்டும்.

படைத்தலைவன் இப் படிச் சேந்த னிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே வெளியில் தாரைகள் சப்தித்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொங்கோவில் கடும் மோதல்

## இதுவரை 700 பேர் உயிரிழப்பு



(கொங்கோ)

கொங்கோ குடியரசின் மிகப்பெரிய நகரமான கோமா வில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் இடம் பெற்று வரும் கடுமையான மோதலில் 700 பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ருவாண்டாவின் ஆதரவுடன் இயங்கும் எம்.23 கிளர்ச்சி படையினர் வடக்கு கிவு மாகாணத்தின் தலை நகரைக் கைப்பற்றியதை அடுத்து அங்கு மோதல் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் அங்கு சுமார் 2,300 பேர் காயமடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்கள் தெற்கு கிவுவின் தலைநகரான புகாவு பகுதியை நோக்கி நகர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு முதல் கொங்கோ குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்துள்ள நிலையில் கடந்த சில நாட்களாக மோதல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




## அமெரிக்காவில்

## வீடுகள் மீது விழுந்த விமானம்

# தீப்பற்றி எரிந்த வீடுகள்

(வோஷிங்டன்)


ஒரு குழந்தை உட்பட 6 பேரை ஏற்றிச் சென்ற ஒரு சிறிய அம்புலன்ஸ் விமானமொன்று அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் வீடுகள் மற்றும் வாகனங்களுக்கு மேல் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது, விமானம் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பல வீடுகளில் தீ பற்றியுள்ளது.

இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேத விபரங்கள் பற்றி இதுவரை செய்திகள் வெளியாக வில்லை.

2 பணியாளர் கள், ஒரு குழந்தை, மருத்துவ நோயாளி மற்றும் அவரது தாய், விமானி உள்ளிட்டோர் குறித்த விமானத்தில் பயணித்துள்ளதாக ஏர் அம்புலன்ஸ் நிறுவனமான ஜெட் ரெஸ்க்யூ ஏர் அம்புலன்ஸ் தெரிவித்துள்ளது. (நி-8)





# காற்று மாசுபாட்டை குறைக்க புதிய திட்டம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இதனால், கார்பன் வெளிப்பாடு குறைவதுடன், காற்று மாசுபாடு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான 30 சதவீத இலக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான செயற்றிட்டம் வகுக்கப்பட்டு உள்ளது என அந்நாட்டு ஆற்றல் மற்றும் உட்கட்டமைப்பு துறைக்கான அமைச்சர் கூறியுள்ளார்.

இவற்றில் இலக்கை அடைவதற்கான 88 சதவீத நடவடிக்கைகள் முன்பே அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கான பணிகள் நடந்து வருகின்றன என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



இஸ்ரேலின் ஆற்றல் பாதுகாப்புக்கு இந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முக்கிய பங்கு வகிக்கும் என்று அதுபற்றிய அறிக்கை தெரிவிக்கின்றது.

2035 ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான விரிவானதொரு செயற்றிட்டம் வகுப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை சேனாதிராஜாவிற்கு முல்லை நகரில் அஞ்சலி




(முல்லைத்தீவு)

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவிற்கு முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதான சுற்றுவட்டப்பாதையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு பிரதேச இலங்கைத் தமிழரசுக் கட்சித் தொண்டர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்றிருந்தார்.

அந்தவகையில் துக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் முல்லைத்தீவு பிரதான சுற்றுவட்டப்பாதை வளாகம் கறுப்பு மற்றும், வெள்ளைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், அவ்வாறு அலங்கரிக்கப்பட்ட இடத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் உருவப்படம் வைக்கப்பட்டு.உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. (நி-8-299)

# சுதந்திர தினத்தன்று எதிர்ப்பு போராட்டம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

(தருமபுரம்)

**எமது பிள்ளைகள் தொடர்பில் நீண்ட காலமாக போராடி வருகிறோம். போராட்டம் தொடர்ந்து கொண்டு இருக்கும் நிலையில், தீர்வினை தருவதற்கு அரசு தயாராக இல்லை எனவே எதிர்வரும் சுதந்திர தினத்தில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம்.**

இப்போராட்டத்தில் அனைவரும் ஆதரவு தந்து போராட்டத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் அரச தலைவர்கள் தீர்வு தருவதாக கூறுவார்கள். நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றோம்.

எமது வலிகளையும், உணர்வுகளையும் அறிந்தவராக ஆட்சி பீடத்தில் ஏறிய ஜனாதிபதியும் எமக்கு தீர்வினைத் தர முன்வரவில்லை.

காணாமல் போனோர் தொடர்பாக போராடும் வலையமைப்பினை தானாக சந்திக்க முன்வரவும் இல்லை. அது தொடர்பில் பேசவும் இல்லை.

அரசியல் கைதிகளாக சிறையில் துன்பப்படுகின்றார்கள். மக்களின் காணிகளில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் தீர்வுகள் இல்லை. இவ்வாறான நிலையில் சுதந்திர தினத்தை கொண்டாடி சர்வதேசத்துக்கு காட்ட முனைகின்றனர்.

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் சுதந்திரத்தை பெறவில்லை.

இந்த நிலையில்தான் எதிர்வரும் 4 ஆம் திகதி சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-8-316)

# விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் ஆளுநர்-ரவிகரன் எம்.பி கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோருக்கிடையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள்தொடர்பில் ஆராயப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போதியளவு நெல் உலரவிடும் தளங்களோ, நெல் உலரவிடும் இயந்திரப் பொறித்தொகுதிகளோ இன்மையால் விவசாயிகள் பிரதான வீதிகளை நெல் உலர விடும் தளங்களாக பயன்படுத்தும் அவலநிலை தொடர்பிலும், அவற்றால் ஏற்படும் சிக்கல்நிலை தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது ஆளுநரிடம் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நெல் உலரவிடுதலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் நெல்உலரவைக்கும் இயந்திரப் பொறித்தொகுதி ஒன்றினை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெற்றுத் தருமாறு பாராளுமன்ற உறுப்பினரால் இதன்போது கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

விவசாயிகளின் நன்மை கருதி முன்வைத்த நெல் உலரவைக்கும் இயந்திரப்பொறித்தொகுதியை முல்லைத்தீவிற்கு பெறுவது தொடர்பான கோரிக்கையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

குறித்த நெல் உலரவிடும் பொறித்தொகுதியை முல்லைத்தீவிற்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஆளுநர் இதன்போது தெரிவித்திருந்தார்.

மேலும் இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபையின் தலைவர் பொன்னம்பலம் சத்தியமூர்த்தி, உபதலைவர் இ.வேதநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-299)

# மக்களின் நெருக்கடி நிலைமைகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி-அமைச்சர் சந்திரசேகர்

(கொழும்பு)



75 வருட காலமாக எமது நாட்டு மக்கள் அனுபவித்த துன்பமான வாழ்க்கையை மீண்டும் எம் மக்களுடைய தலையில் கட்ட முன்னைய ஆட்சியாளர்கள் தீவிரம் காட்டுகின்றனர் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தென்மராட்சி எழுதுமட்டுவாள் கிராமத்தில் ஜனாதிபதி பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்.

தேசிய மக்கள் சக்திக்கு எதிராகவும் நாட்டு மக்களைக் குழப்புவதற்கும் மிகப்பெரிய சதி மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 75 வருடங்களாக நாட்டைச் சீரழித்தவர்கள் இப்போது ஒன்று சேர்ந்து நிற்கின்றனர்.

எமது தலையில் இனி மேலும் மிளகாய் அரைக்க முடியாது.அதற்கு மக்கள் இடமளிக்கவும் கூடாது. தற்போது தேங்காய்,அரிசி விலை அதிகம் தான்.ஆனால் இது நிரந்தரமானது அல்ல.

நாம் ஆட்சிக்கு வந்து வெறுமனே 65 நாட்கள் தான் ஆகின்றது.

நாம் நிச்சயமாக சாதிப்போம். மக்களுடைய நெருக்கடி நிலைமைகளைத் தீர்ப்போம்.அதற்கு மக்கள் உறுதுணையாகவும் அந்த சாதனைக்கு உரியவர்களாகவும் திகழ வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.(நி-8-30)

# தூய்மையான இலங்கை அறிமுக நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் "தூய்மையான இலங்கை" செயற்றிட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான அறிமுக நிகழ்வு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட திரு நகர் வட்டாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை . எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

மணமகன் தேவை
1995, இந்து, ரோஹிணி, TEACHER
பூர்வீகம் - கிளிநொச்சி, வதிவிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11226.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

மணமகள் தேவை
1991, இந்து, ஆயிலியம், ACCOUNTANT
பூர்வீகம் - புலோலி, வதிவிடம் - U,K
மணமகன் பதிவு இல: 11154.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

435

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆரம்ப நிலைகளில் புற்றுநோய்களை கண்டறிதல்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

துரதிஷ்டவசமாக எமது பிரதேசத்தில், 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனைவருக்கும் இந்தப் பரிசோதனையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.


இப் பரிசோதனை மூலம், மிக ஆரம்பத்திலேயே புற்றுநோய்களைக் கண்டறிய முடிவதுடன், அதற்கான சிகிச்சைகளும் மிகுந்த பலனளிக்கக் கூடியதாக காணப்படுகிறது. இது தவிர மார்பகப் புற்று நோய்க்குரிய முக்கியமான அறிகுறியாக, மார்பில் வெவ்வேறு அளவிலான கட்டிகள் காணப்படலாம். அதற்கான சுய மார்புப் பரிசோதனையை அனைத்துப் பெண்களும் மேற்கொள்ள வேண்டும்.

கண்ணாடி முன் நின்று இரு மார்பகங்களையும் அவதானித்து, ஒப்பிட்டுப் பார்த்து சமச்சீராக காணப்படுகிறதா என கவனிக்க வேண்டும். மார்பகத் தோலில் சில மாற்றங்கள் ஏற்படலாம். குழிகள் அல்லது சமச்சீர் அற்ற தன்மையை தோலில் அவதானிக்கலாம். இது மட்டுமின்றி, அக்குள் பகுதியில் சிறிய கட்டிகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இது சம்பந்தமான தகவல்களை நீங்கள் இலகுவாக இணையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆரம்ப மார்பக புற்றுநோயின் அறிகுறியாக, முலைக் காம்புகளில் இருந்து இரத்தம் அல்லது கறுப்பு நிற திரவம் வெளியேறல் காணப்படுகிறது. இவ்வாறு இருக்குமானால், உடனடியாக வைத்திய ஆலோசனையை அணுகுவது மிகவும் நல்லது.

இந்த மார்பகப் புற்றுநோய்கள் பரவிப் படர்ந்து, நிலை 3 அல்லது 4 ஐ அடையும் போது, மார்பகத்தில் மிகப்பெரிய புண்கள், மார்புக் கூட்டுடன் நிலைக்கொண்ட பெரிய கட்டிகள், அக்குள் பகுதிகளில் பெரிய கட்டிகள் மற்றும் புண்கள், அத்துடன் மார்க்கத்தில் இருந்து தொலைவில் உள்ள அங்கங்கள் அல்லது இழையங்களிற்கு புற்றுநோய் பரவுவதால், அது சார்ந்த அறிகுறிகளும் காணப்படும்.

வாய், தொண்டை மற்றும் கழுத்து புற்றுநோய்களும் எமது பிரதேசத்தில் அதிகமானவர்களுக்கு காணப்படுவது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இவற்றையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, சிகிச்சைகளை அளித்து, பூரணமாக குணப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. இந்தப் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளாக, சுவை மாற்றம், வாயில் நீண்ட நாட்களாக நிலைத்து நிற்கும் எரிச்சல், நீடித்த குரல் மாற்றம் மற்றும் வாயில் ஏற்படக்கூடிய சிவப்பு அல்லது வெள்ளை நிற தேமல்கள் என்பன காணப்படுகின்றன. வாய்ப் பகுதியில் ஏற்படும் ஆறாத புண்கள் மற்றும் புடைத்து வளர்ந்து கொண்டு செல்லும் புண்கள் என்பன இருக்குமானால் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.



இப் புண்கள் வாயின் எப்பகுதியிலும் ஏற்படலாம். அடுத்ததாக, வாய்,தொண்டை மற்றும் களப் புற்றுநோயின் முக்கியமானதொரு அறிகுறியாக விழுங்குவதில் சிரமம் காணப்படும்.

இது தவிர, கழுத்து பகுதிகளில் ஏதாவது கட்டிகள் காணப்படின், கட்டாயமாக மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டியது அவசியமாகும். இவை அனைத்தும் ஆரம்ப அறிகுறிகளாகும். இந்தப் புற்றுநோய் பரவிப் படர்ந்த நிலையில், மிகப் பெரிய புண்கள், முற்றாக விழுங்க முடியாத நிலை, வாய் திறக்க முடியாத நிலை, பேச்சுத்திறன் முற்றாக அழிந்த நிலை, மூச்சுத் திணறல் போன்ற மிகப் பாரதூரமான அறிகுறிகளை ஏற்படுத்தும். குடல் புற்றுநோயினை எடுத்துக் கொண்டால் பொதுவாக இரத்தக் கசிவு, கறுப்பு நிற மலம் கழித்தல், களைப்புத் தன்மை என்பன ஆரம்ப அறிகுறிகளாக காணப்படுகின்றன.

பொதுவான சில புற்றுநோய் அறிகுறிகளாக, உடலின் எப்பாகத்திலும் புதிதாக தோன்றும் கட்டிகள் மற்றும் தொடர்ந்து வளர்ந்து கொண்டு செல்லும் கட்டிகள் என்பன காணப்படுகின்றன. இரத்தப்போக்கு எப் பகுதியில் ஏற்பட்டாலும், அது புற்றுநோயின் அறிகுறியாக இருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். உதாரணமாக, வாய், மூக்கு, சளி, சலம், மலம் போன்றவற்றினூடான இரத்தக் கசிவு மற்றும் மாதவிடாய் தவிர்ந்த பிறப்புறுப்பினூடான இரத்த கசிவு என்பன கவனிக்கப்பட வேண்டியவை. கண், தோல் மற்றும் உடல் மஞ்சள் நிறமாக மாறுதல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

பசி இழப்பு என்பது முக்கியமான ஒரு புற்றுநோய் அறிகுறியாகும். உதாரணமாக, நீங்கள் விரும்பி உண்ணும் உணவை நினைக்கும் போதே வாந்தி வரும் அளவுக்கு பசி இழப்பு காணப்படும்.

அதுமட்டுமல் லாது, 10% இற்கு மேற்பட்ட நோக் கமற்ற உடல் எடை குறைதல் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான அறிகுறிகள் காணப்படும் போது, தகுந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு, புற்றுநோய் தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் பின்னர் சில பரிசோதனைகளை மேற்கொண்டு, இப் புற்றுநோய் எவ்வகையான புற்றுநோய், எந்த நிலையில் இருக்கிறது என அறிந்து கொள்ள வேண்டும்.

அதன் பின்னர், புற்று நோய் மருத்துவ நிபுணர்களின் ஒன்று சேர்ந்த முடிவாக இந்த புற்றுநோயை எவ்வாறு குணப்படுத்துவது என ஆலோசிக்க வேண்டும். அதாவது மருந்து மூலமா அல்லது கதிர்வீச்சு மூலமா அல்லது சத்தி ரசிகிச்சை மூலமா அல்லது இணைந்த முறை மூலமா குணப்படுத்துவது என முடிவெடுக்க வேண்டும். பெரும்பாலான புற்றுநோய்கள் ஒன்றிற்கு மேற்பட்ட முறைகள் மூலமாகவே சிகிச்சை அளிக்கப் படுகின்றன. பூரண குணமடைவதற்கு, புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அதுமட்டுமல்லாது ஆரம்ப நிலை புற்றுநோய்களுக்கு சரியான விதத்தில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டியது அவசியம். ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது, மருத்துவத் துறையுடன் இணைந்து இப் புற்றுநோய்க்கு எதிராக போராட வேண்டியிருக்கும்.

புற்று நோய் வராமல் தவிர்த்து கொள்ள, உடல் மற்றும் மனம் சார்ந்த ஆரோக்கியமான வாழ்க்கை முறை, ஆரோக்கியமான உணவு முறை என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும். இந்த புற்றுநோயிலிருந்து உங்களை காத்துக்கொள்வதுடன், இந்த அறிவை ஏனையவர்களுடனும் பகிர்ந்து மற்றவர்களையும் காத்துக்கொள்ள வழி காட்டுவதே சிறந்தது.

(முற்றும்.)

Dr. க.சிறிதரன்,
புற்றுநோய்
சத்திரசிகிச்சை நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப் வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும் பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும். ~ பயரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதியின் கேள்விக்கு வடக்கின் பதில் என்ன?

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் (31) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்றிருந்தார்.

இந்நாட்டின் ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் அவர் யாழ்ப்பாணத்தில் கலந்துகொண்ட முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இது வாகும்.

எனவே மேற்படிக் கூட்டம் தொடர்பில் கணிசமான எதிர்பார்ப்புகள் மக்களிடம் இருந்தன.

ஆம், ஜனாதிபதி அநுர கலந்து கொள்கின்ற முதலாவது கூட்டம். இதுதவிர, யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற ஆசனங்கள் மூன்றைப் பெற்றுள்ளது.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் காணி விடுவிப்பு, காணாமல்போனவர்கள் தொடர்பான விவகாரம், இனப் பிரச்சினைக்கான தீர்வு, இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள முதலீட்டுத் திட்டங்கள் என முக்கியமான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜனாதிபதி அநுர முக்கியமான ஒரு கேள்வியை மட்டும் கூட்டத்தில் கேட்டிருந்தார்.

அதாவது நாங்கள் ஒதுக்குகின்ற நிதியை செலவிடாமல், ஏன் திருப்பி அனுப்புகிறீர்கள் என்பதுதான் அந்தக் கேள்வி.

இங்குதான் எங்கள் அரச நிர்வாகம் எப்படி இயங்குகிறது என்பதை நாடும் உலகமும் நன்கு அறியக்கூடியதாகவுள்ளது.

ஆம், இங்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை உரிய வேலைத்திட்டங்களுக்குச் செலவிடாமல் திருப்பி அனுப்புகிறீர்கள். அப்படியானால், உங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் என்ன பயன் உண்டு என்பதுதான் ஜனாதிபதி எழுப்பிய கேள்வியின் உட்பொருள்.

ஆக, ஜனாதிபதி அநுர எழுப்பிய மேற்படி கேள்வியானது, எங்களுக்கு நிதி ஒதுக்குங்கள் என்று நாம் முன்வைக்கக்கூடிய கோரிக்கையை அப்படியே கைவிடச் செய்துள்ளது.

இதனால்தான் நாம் பல தடவை இவ்விடத்தில் வடக்கின் நிர்வாகம் தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தோம்.

என்ன செய்வது, கிடைத்த அரச பதவிகளுக்குரிய கடமைகளை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் செய்யத் தவறும்போது, எல்லாமும் வீணாகி எங்கள் மக்களின் தலைகளில் மண்ணைக் கொட்டுவதாகவுள்ளது.

உண்மையில் எங்கள் அரச திணைக்களங்கள் மிகத் துல்லியமாகச் செயற்படுமாக இருந்தால், ஜனாதிபதி அநுரவுக்கு முன்பாக எழுந்து நின்று, நிதி மீள அனுப்பப்பட்டதற்கான காரணங்களை பட்டியல் படுத்தியிருக்க வேண்டும்.

குறிப்பாக மத்திய அரசு உரிய காலத்தில் நிதியை விடுவிக்கவில்லை என்றால், அதைத் துணிந்து சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அது எதுவும் நடக்கவில்லை.

ஆக, எங்கள் வடக்கின் அரச நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இல்லையேல் நிலைமை மிகவும் மோசமாகும் கவனம்.

# மக்களால் கட்டியெழுப்பப்பட்ட தே.ம.சக்தி அரசை வீழ்த்தும் நோக்கில் ஒன்றிணையும் எதிர்க்கட்சிகள்

## மக்கள் துணையுடன் வெல்வோம் என்கிறார் பிமல் ரத்நாயக்க

தற்போது இலங்கை வாழ் மக்களால் புதிய அரசியல் வரலாறு ஒன்று படைக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் வடக்கு - தெற்கு, தமிழர், சிங்களவர் என்ற பிரதேச, இன பேதங்களைக் கடந்து ஒன்றிணைந்த மக்களால் உருவாக்கப்பட்டது. எதிரிகளால் இதனை எளிதில் வீழ்த்தி விடமுடியாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் - சஜித் சங்கமம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

எமது மக்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என பிளவுபடாது ஒன்றிணைந்துள்ளனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்று என்பதைக் கடந்த இரண்டு பிரதான தேர்தல்களின் போது காண்பித்துள்ளனர். செப்ரெம்பர் 21 ஆம் திகதி யாவரும் ஒன்றிணைந்த இலங்கை உருவானது என நினைக்கிறேன். இலங்கை முன்னோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தினால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. எமக்காக நாட்டின் சாதாரண மக்கள் ஒன்றாக ஒன்றிணையும் போது எதிர்க்கட்சியினர் எமக்கெதிராகக் கூட்டுச் சேர முயற்சிக்கின்றனர். பிரிந்து செயற்பட்ட சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ, ரவி கருணாநாயக்க, விமல் வீரவன்ச, மனோ கணேசன் ஆகியோர் ஒன்றிணைந்துள்ளனர்.

எதிரிகளாகச் செயற்பட்டவர்கள் மீண்டும் நண்பர்களாக மாறியுள்ளனர். அன்று ரணில் விக்கிரமசிங்க மகிந்தவுக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரினார். சஜித் பிரேமதாஸ, சுமந்திரன் ஆகியோர் மகிந்தவுக்கும் ரணிலுக்கும் எதிராக வாக்களிக்குமாறு கோரினார்கள். இந்த நாட்டை வங்குரோத்து அடைய செய்த குழுவினர் இன்று மீண்டும் கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

மக்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த அரசாங்கத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். எமது இலக்கை அடையும் வரை நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிக்க வேண்டும் என்றார். (ம-7)

# ஜனாதிபதி அநுரவின் இரட்டை நிலைப்பாடு!

## முன்னாள் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இரட்டை நிலைப்பாடு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அம்பலப்படுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகை மதிப்பீடு இலட்சங்களில் இருப்பதாகவும் அதன் காரணமாக அவர் அதனை விட்டு வெளியேற வேண்டும் என்றும் ஜனாதிபதி அண்மைக்காலமாக தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

அதுமாத்திரமன்றி மகிந்த ராஜபக்ஷ தானாக வெளியேறாது போனால் தான் பலவந்தமாக வெளியேற்றப் போவதாகவும் அவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

எனினும் கடந்த நல்லாட்சிக் காலத்தில் குறித்த இல்லத்தை மகிந்தவுக்கு வழங்குவதற்கான கலந்துரையாடலின் போது அநுரவும் பங்குபற்றியதாகவும், அவரது சம்மதத்துடனேயே குறித்த வீடு மகிந்தவுக்கு ஒதுக்கப்பட்டதாகவும் ரணில் தெரிவித்துள்ளார். (ம-7)

## கிளி.பொலிஸ் நிலையம் முன்பாக
# வாகன விபத்து இருவர் காயம்

(கிளிநொச்சி)

யாழிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கார் ஒன்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் விபத்துக்குள்ளாகியது.

நேற்றிரவு 7 மணியளவில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவரும் சிறு காயங்களுக்குள்ளாகியதுடன் விபத்துச் சம்பவித்த தருணத்தில் கனரக வாகனங்கள் குறித்த வீதியால் பயணிக்காமையால் பாரிய சேதங்கள் தவிர்க்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100)

## மெதிரிகிரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது

மெதிரிகிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பெண் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வெளியாகியது மொரட்டுவ ப.நோ.கூ. சங்கத் தேர்தல் முடிவுகள்
# ஐ.ம.சக்தி உள்ளே தே.ம.சக்தி வெளியே

(மொரட்டுவ)

மொரட்டுவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின.

இரகசிய வாக்கெடுப்பு முறைமையில் இடம்பெற்ற குறித்த தேர்தலில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி 46 வாக்குகளை மாத்திரம் பெற்றிருந்த நிலையில்,

அதனை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி 51 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது.

குறித்த தேர்தலில் முப்பது வருடங்களுக்குப் பின் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்களில் பெரும் வெற்றியீட்டியிருந்ததோடு உள்ளூராட்சித் தேர்தலிலும் தனது வெற்றிச் சரித்திரத்தைத் தொடர எதிர்பார்த்திருந்தது.

இந்நிலையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் ஏற்படும் தொடர் தோல்வி தேசிய மக்கள் சக்திக்குப் பாரிய பின்னடைவாக அமைந்துள்ளது. (ம-7)

## குஷ் போதைப்பொருளுடன் இருவர் அதிரடிக் கைது

குஷ் போதைப்பொருளுடன் இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து 2 கிலோகிராம் குஷ் போதைப்பொருளுடன் விமானம் மூலம் இலங்கைக்கு வந்த சந்தேக நபரும் அவருக்கு உதவிய மற்றுமொரு சந்தேக நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் 31 மற்றும் 36 வயதுடைய ஹங்வெல்ல மற்றும் உடுகம்பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025

## எடுத்த காரியங்கள் சாதகமாக முடியும்



**கிரகநிலை**

இராசியில் செவ்வாய்(வ) - சுக ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் குரு (வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

05.02.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சூரியன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று ராசியில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:**

நீங்கள் விடா முயற்சியுடைவர். இந்த மாதம் இராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்திலிருக்கிறார். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நல்லது. சுக்கிரன் சஞ்சாரம் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் சாதகமாக முடியும். சொத்து மனை வீடு சம்பந்தமான காரியங்களில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

தொழில் வியாபாரம் மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. எடுத்த வேலைகளை சரியான நேரத்தில் செய்ய திட்டமிடுவது நல்லது. பணி நிமித்தமாக பிரயாணம் ஏற்படலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர்கள் வழியில் மனக்கசப்பு ஏற்படலாம். பெண்களுக்கு எந்த காரியத்திலும் ஈடுபடும் முன்பு திட்டமிட்டு செயற்படுவது நல்லது. பணவரத்து தாமதப்படும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க பட்ட சிரமங்கள் குறையும். வேலை பளு குறையும். உழைப்பு வீணாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திடீர் செலவு உண்டாகும். அரசியல்துறையினருக்கு இறுக்கமான சூழ்நிலை நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். சந்தோஷமாக வெளியே சென்று வருவீர்கள். எல்லாக் காரியங்களும் அனுகூலமாக நடக்கும்.

மனக்கவலை நீங்கி நிம்மதி உண்டாகும். பொருள் வரத்து அதிகரிக்கும்.




வாகனம், பூமி மூலம் இலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருக்கும் மந்த நிலை மாற கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம். எந்த வேலையிலும் முழு கவனம் தேவை.

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க முழு முயற்சி மேற்கொள்வீர்கள். வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். பயணங்களால் நன்மை உண்டாகும். மன குழப்பம் நீங்கி தெளிவு உண்டாகும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி | | |
| சூர் புதன் | 05.02 – புத – கும் 11.02 – குரு – வறி 12.02 – சூர் – கும் 21.02 – செ – வறி 26.02 – புத - மீன | | |
| | | | கேது |

**திருவாதிரை:** இந்த மாதம் குடும்பத்தினருடன் விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு வரும். எதிலும் எச்சரிக்கையும் கவனமும் தேவை. தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஓடர்கள் பெறுவதில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயற்பட்டு பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்து மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினை விலகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும். சகோதரர் மூலம் நன்மை ஏற்படும்.

**பரிகாரம்:** இராமரை வணங்க குடும்பத்தில் குழப்பம் நீங்கி நன்மை உண்டாகும். ஆரோக்கியம் உண்டாகும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26

**அதிஷ்ட தினங்கள்:** 18, 19

## நீண்ட நாட்களாக இருந்து வந்த தடைகள் நீங்கும்



**கிரகநிலை**

தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது களத்திர ஸ்தானத்தில் சூரியன், புதன் அஷ்டம ஸ்தானத்தில் சனி - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - இலாப ஸ்தானத்தில் குரு (வ) - விரய ஸ்தானத்தில் செவ்வாய்(வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

05.02.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று இலாப ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சூரியன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:**

இந்த மாதம் நீண்ட நாட்களாக இருந்து வந்த தடைகள் நீங்கும். தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் எதிர்ப்புகள் விலகும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தது போல் இருக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கலாம். பாதியில் நின்ற காரியங்களை தொடர்ந்து செய்து முடிப்பீர்கள். வழக்குகளில் திடீர் குழப்பம் ஏற்படலாம். தீ, எந்திரம் ஆகியவற்றை கையாளும் போது கவனம் தேவை.

தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் வக்கிரமாக இருந்தாலும் சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் உச்சமாக இருப்பதால் இது யோகமான காலம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைத்தாலும் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். சரக்குகளை அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செயலாற்றுவது நல்லது.

குடும்பாதிபதி சூரியன் அவரது ஸ்தானத்திற்கு சப்தம ஸ்தானத்திற்கு மாற போகிறார். குடும்பத்தில் சிறு சிறு சண்டைகள் உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நன்மை தரும். பெரியோர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவது சிறந்தது. பெண்களுக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சமையல் செய்யும் போதும் மின் சாதனங்களை இயக்கும் போதும் கவனம் தேவை.

கலைத்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். எல்லா காரியங்களும் நல்ல படியாக நடக்கும். ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். வாகனங்களை ஓட்டும்போதும் எச்சரிக்கை அவசியம். வீண் செலவு ஏற்படும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது




எடுபடாமல் போகலாம்.

அரசியல்துறையினருக்கு மற்றவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். மேலிடத்தின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். பெற்றோர், ஆசிரியர் ஆலோசனை கைகொடுக்கும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் பிள்ளைகள் எதிர்காலம் குறித்து சிந்தனை மேலோங்கும். உறவினர்கள், நண்பர்களின் உதவியும் கிடைக்கும். திறமையாக பேசுவதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். தெளிவான சிந்தனை இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி | | |
| சூர் புதன் | 05.02 – புத – கும் 11.02 – குரு – வறி 12.02 – சூர் – கும் 21.02 – செ – வறி 26.02 – புத - மீன | | |
| | | | கேது |

**பூசம்:** இந்த மாதம் மனதில் உற்சாகம் உண்டாகும். மனஅமைதி ஏற்படும். வாழ்க்கை சிறப்படையும். திடீர் கோபம் ஏற்படலாம். கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. வீண் அலைச்சல், மனக்குழப்பம் உண்டாகலாம்.

**ஆயிலியம்:** இந்த மாதம் நன்மை ஏற்படும். பணவரத்து இருக்கும். இழுபறியான காரியங்கள் சாதகமாக முடியும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். முக்கிய முடிவு எடுக்கும் போது தடுமாற்றம் ஏற்படலாம்.

**பரிகாரம்:** துர்க்கைக்கு அரளிப்பூ சார்த்தி வணங்க துன்பங்கள் தீரும். மனக்கவலை அகலும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன் **சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28

**அதிஷ்ட தினங்கள்:** 20. 21, 22

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின்...

மான வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலாவ பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அவர்களுடன் வந்த மற்றொரு வாகனத்தில் தலாவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களின் சாரதி ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர்கள் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மாவைக்கு...

மறைந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் உடலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது, பொதுஜன பெரமுனவின் வடக்குக்கான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கமும் மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதனையடுத்து நாமல் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "மறைந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா, ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களுக்காகப் போராடினார்.

நாங்கள் ஆட்சியில் இருந்துபோதும் தமிழ் மக்களின் நலனுக்காக எங்களுடன் ஆலோசனைகளை நடத்தியுள்ளார். அவருடைய குடும்பத்தினருக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றேன்" எனக் குறிப்பிட்டார். (ம-7)

## அமைச்சுக்களை...

(ஜே.வி.பி)யின் மூத்த மற்றும் முக்கிய உறுப்பினர்களே இவ்வாறு கண்காணிப்புக் குழு உறுப்பினர்களாக அமைச்சுக்களுக்கு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அமைச்சுக்களிலும் குறைந்த பட்சம் ஐந்து பேர் கொண்ட கண்காணிப்புக் குழு நியமிக்கப்படவுள்ளது. (ம-7)

## 5 வருடங்களில்...

அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட மரணங்களில் 19 வயதுக்குட்பட்ட 2,000 மரணங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மாவையின்...

அவரது இல்லத்தில் சமயக் கிரியைகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி உரைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பின்னர் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 76 வேலைத்திட்...

யாரும் கடன் கொடுக்கவில்லை எனவும், ஏற்கெனவே பெற்றுக் கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தவும் இல்லை எனவும் தெரிவித்தார். (ம-7)

## எதிர்த்து...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதோடு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான உறுப்புக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக 2014ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட மாவை சேனாதிராஜா 2024ஆம் ஆண்டு சுயவிருப்பின் அடிப்படையில் தலைவர் பதவியை இராஜினாமா செய்தார்.

எமக்கு எதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் பாராளுமன்றத்தில் சந்திக்கையில் இணக்கமாகவே செயற்படுவார். சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டியபோது மாவை சேனாதிராஜா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (ம-7)

## மகிந்தவுக்கு..

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கான இல்லத்திலிருந்து வெளியேறுமாறு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டபோதும், அதற்கான எந்தவித நடவடிக்கையும் மகிந்த தரப்பில் இது வரை எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் அவரைக் கொழும்பு விஜேராம மாவத்தையில் உத்தியோகபூர்வ வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த இப்போதே வீட்டை விட்டுச் சென்று விட்டால் கௌரவமாகச் செல்ல முடியும். இல்லையேல் சட்ட ரீதியாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் எனப் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கடந்த...

சொத்துக் குவிப்பு விடயங்கள் தொடர்பில் வழக்குகள் பதியப்பட்டு, பின்னர் விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பதினொரு வழக்குகளையே மீண்டும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நான்கு வழக்குகளின் விசாரணைகளை நிறைவு செய்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார், சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அவற்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் நான்கு வழக்குகள் தொடர்பான கோப்புகள் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய மூன்று வழக்குகள் தொடர்பிலும் துரிதமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் வழக்குகள் தொடர்பில் முன்னைய அரசின் ஐந்துக்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படலாம் என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில் நிலுவையில் உள்ள நில வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்கான புதிய திட்டத்தை தொடங்க நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சகம் முடிவு செய்துள்ளது. (ம-7)

## திருக்குறள்...

இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.மகாதேவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருக்குறள் வளாகத்தைத் திறந்து வைப்பார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 5734
N 1 0 7 0 0 3
அத சம்பத
N 7 0 0 3
சீட்டிழுப்பு இலக்கம் 309
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1764
Z 21 31 44 66 Z
Double Chance 43628

மெகா பவர்
திகதி 01/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2082
J 13 15 27 37 67

ஜய
திகதி 2025.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 0002
E 4 1 4 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3976
சீட்டிழுப்பு திகதி 01.02.2025
F 07 12 18 66
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 1043
கும்பம் 03 14 27 29 கும்பம்
20523 45

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.02.2025 வெற்றி வாரம் 442
G 2 4 8 2 2 4
60909
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,285,593.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2708
சீட்டிழுப்பு திகதி 2025.02.01 தினம் சனிக்கிழமை
07 11 29 75 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,547,441.60
DLB

சனிதா
திகதி 01.02.2025 வெற்றி வாரம் 4869
05 17 56 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,901,641.20
88709
DLB

சசிரி
வெற்றி வாரம் 613
சீட்டிழுப்பு திகதி 01.02.2025
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 18 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4420
சீட்டிழுப்பு திகதி 01.02.2025 தினம் சனிக்கிழமை
11 26 27 56 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,627,982.00
177842
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 38 36 37 52 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,873,071.20
1884
01.02.2025 சனிக்கிழமை
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2534
சீட்டிழுப்பு திகதி : 2025.02.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,897,988.00
09 36 55 72 K
643503
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6 - O/L

ஆங்கில, தமிழ் மொழி மூலம்

**GROUP CLASSES**

**NEWTON**
**NALLUR**

**077 792 3653**

(3294)

---

## இணைய வழி வணிக செயல்பாட்டுப் பணியாளர் பதவி வெற்றிடம் (Online Business Operator)

நிறுவனம் : VIMIX PVT LTD (UK)

இடம் : மானிப்பாய், யாழ்ப்பாணம்

தகைமைகள் :

1. Degree / HNDIT:- (Photoshop மற்றும் இணைய சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு)
2. ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சி (speaking and writing)
3. சந்தைப்படுத்தல் தொடர்பான முன் அனுபவம் (E- Commerce).

சம்பளம்: ரூபா 35,000/- முதல் ரூபா 60,000/- (தகுதி அடிப்படையில்)

vstarlondon25@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு CVஐ அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு : **077 070 0362**

(803)

---

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Practical to UKVI on Computer**

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(2907)

---

## வேலைக்கு ஆட்கள் தேவை

A/L பரீட்சைக்கு தோற்றிய, 21 வயதிற்கு மேற்பட்ட, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள

- விற்பனைப் பிரதிநிதி (sales man)
- விற்பனைப் பிரதிநிதி உதவியாளர் (merchandiser)

தேவை.

தொடர்புகளுக்கு :

**077 367 7613, 077 611 0185**

(805)

---

## பெண் பராமரிப்பாளர் தேவை

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அம்மா ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள பெண் பராமரிப்பாளர் உடன் தேவை. சம்பளம் பேசி நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

whatsapp மூலமும் தொடர்பு கொள்ளலாம். **077 009 5706**

(3257)

---

ஆங்கில மொழி மூல

## கணிதம்

தரம் 6 – 11 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இடம் : சங்கிலியன் மன்றம் சட்டநாதர் கோவில் முன்பாக

**077 864 5971**

(3308)

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 226/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2710/= | |
| 1Kg கீரிச் சம்பா அரிசி | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 975/= | ~~1050/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

400g Anchor

990/=



~~1050/=~~

400g நெஸ்டமோல்ட்

735/=



~~780/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(804)

Happy Supermarket
0777 8080 30

---

## காணி விற்பனைக்கு (40 பரப்பு)

வசாவிளான் அச்சுவேலி வீதியில் சீர்திருத்தப் பாடசாலை மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு செல்லும் காப்பெற் வீதியில் கம்பி வேலியினால் சுற்றி அடைக்கப்பட்ட 3 அறை வீடு வெட்டுக் கிணற்றுடன் கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

**075 696 6957**

(3302)

---

## V2 VISA SERVICES

## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-2178)

---

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் சிறுவர் பராமரிப்பு வேலைக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை.

- முகாமையாளர்
- சமையலாளர்
- பராமரிப்பாளர்

உடன் தொடர்பு கொள்ளவும்.

**071 535 4500**

(790)

---

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK20 நீர் இறைக்கும் இயந்திரம் (water pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)

"நாங்கள் உங்களோடு"

(3300)


**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021

A9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571

A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917



---

Royal

அறுசுவை உணவுகளிற்கு

## றோயல்

## சுத்தமான பசு நெய்

*உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை*
தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

**ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.**

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:-
Royal Industries®

(C-2175)

---

## Digitec நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

யாழ். மத்தியில் கணினி மற்றும் இலத்திரனியல் துறைகளில் பணியாற்றுவதற்கு தகுதியான பணியாளர்கள் தேவை. ஆரம்ப சம்பளம் ரூபாய் 65000/- முதல்.

**077 868 8517**

(802)

---

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு கிழக்கு, சாவகச்சேரி சுண்டுக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் 4 பரப்புக் காணி 4 ¾ மூன்று பக்கமும் முட்கம்பி வேலி, தென்னை உள்ளடங்கியது. இரண்டு பாதைகள் உள்ளது. 14' 12" விலை பரப்பு 7 இலட்சம்.

**077 220 3386**

(3270)

---

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கோண்டாவில் இராசபாதை வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இராசபாதை வீதி முகப்புடன்
- இராசபாதை வீதிச் சந்தியிலிருந்து ½ Km தூரம்
- திருநெல்வேலி சந்தை 2 Km தூரம்
- யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் 5.5 Km தூரம்
- செம்மண்தரை, நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை எண்பது இலட்சம் (80 லட்சம்)
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நல்ல சூழல், வியாபார நிலையம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை

(3290)

**070 290 2338, 076 069 1105**

---

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :

**077 623 4204, 076 755 8606**

(3301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.